வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 08.07.2021 வியாழக்கிழமை | இதழ் : 217 | பக்கங்கள் : 16

# தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு: பிரிட்டனின் அழுத்தம் தொடரும்

## கூட்டமைப்பினரிடம் தூதுவர் நேரில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 08

“வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்னைகள் மற்றும் அரசியல் பிரச்னைகள் என அனைத்துப் பிரச்னைகளுக்கும் ஆட்சியிலுள்ள அரசு நிரந்தர தீர்வுகளை வழங்க வேண்டும். இது அரசின் பிரதான கடமை. இந்த விடயங்களில் பிரிட்டனின் அழுத்தங்கள் தொடர்ந்து இருக்கும்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் நேற்று தெரிவித்தார் இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன்.

15



## நாட்டின் மரபுரிமையை அழிப்பதற்கு எவருக்குமே இடமளிக்கமாட்டோம்!



### பிரதமர் மஹிந்த திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 08

எமது நாட்டின் பாரம்பரியத்தை அழிக்க எவருக்கும் இடமளிக்கமாட்டோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற 131 ஆவது தேசிய தொல்பொருள் தின நிகழ்வில் கலந்து

15

## அபிவிருத்தி திட்டங்களுக்காக காணி கையகப்படுத்த அனுமதி

கொழும்பு, ஜூலை 08

காணி சுவீகரித்தல் சட்டத்துக்குப் பொருத்தமான திருத்தங்களை அறிமுகப்படுத்தும் வரை, அரச பணிகளுக்காக கையகப்படுத்தப்படும் காணிகளுக்கான இழப்பீடுகளைச் செலுத்துவதற்காக ‘லார்க்’ மற்றும் ‘சுப்பர் லார்க்’ முறைமையை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, முன்னு

15

## மஹிந்தவிடம் உள்ள நிதி அமைச்சு இன்று பஸில் வசம் கைமாறுகிறது

கொழும்பு, ஜூலை 08

பாராளுமன்ற உறுப்பினராக நேற்று நியமிக்கப்பட்ட பஸில் ராஜபக்ஷ அநேகமாக நிதி அமைச்சுப் பொறுப்பை இன்று ஏற்றுக்கொள்வார் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வசம் தற்போது நிதி அமைச்சு பொறுப்பு, உள்ள நிலையில் அவர் தானாக முன்வந்து நிதி அமைச்சை பஸில் ராஜபக்ஷவிடம் கையளிப்பார் என

15

## இலங்கையின் ஏற்றுமதியிலும் சீனாவின் ஆதிக்கம் அதிகரிப்பு

### பாராளுமன்றில் வினோ எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 08

இலங்கையில் ஏற்றுமதி செயல்பாட்டில் சீனர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் இலங்கையின் அரசியலிலும் சீனா ஆக்கிரமிப்பும் ஆதிக்கமும் செலுத்துவதை உங்களால் தடுக்க முடியாது. இதேவேளை இலங்கை அரசு தோல்வி

15

## ஆசிரியர்களுக்கு தடுப்பூசி: திங்கட்கிழமை ஆரம்பம்!

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்ப, ஜூலை 08

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் பணி எதிர் வரும் 12ஆம் திகதி - திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

“சகல ஆசிரியர்களுக்

15

## மேலும் 38 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 08

இலங்கையில் மேலும் 38 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல

15

## 1,229 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, ஜூலை 08

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1, 229 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற

15




## வைத்தியசாலை அபிவிருத்திக்கான காணியை இராணுவத்துக்கு வழங்க நடவடிக்கையா?

### ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் கஜேந்திரன்

கொழும்பு, ஜூலை 08

யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படவேண்டிய ஒன்றரை ஏக்கர் காணியை இராணுவத்தினருக்கு வழங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி அந்தக் காணியை யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு கையளிக்க வேண்டுமென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி.யான செல்வராஜா

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது…!

நண்பர் ஒருவர் கனடாவிலிருந்து தொலை பேசியில் பேசினார் - அப்போது நேரம் அதிகாலை 1.47.

இப்போதெல்லாம் இந்த வட்ஸ்அப், வைபர் என்று செயலிகள் வந்த பின்னர் நேரம் கேட்ட நேரங்களிலெல்லாம் நண்பர்கள் தொலை பேசியில் அழைப்பதும் தூக்கத்தைக் கெடுப்பதும் தினசரி நிகழ்வுகளாகிவிட்டன.

யாழ்ப்பாணத்திலுள்ள நண்பர் சட்டத்தரணி றெங்கன், எப்போதும் குட்டி ரெலிபோன் ஒன்றையே வைத்திருப்பார். அந்தக்காலத்தில் இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்ற அந்த கைபேசியுடன் அவரைக் காணும் போதெல்லாம் 'ஏன் ஒரு ஸ்மாட் போனை' வாங்கினால் என்ன என்கின்றபோது, அவர் ஐயோ பிறகு நித்திரை கொள்ள முடியாது என்று சொல்வதுதான் அந்த நள்ளிரவில் நினைவில் வந்து சென்றது.

நண்பர் வழக்கமான நலன் விசாரிப்புகளுக்குப் பிறகு "நான் ஒரு கதை சொல்லலாமா", என்று கேட்டார்.

ஏதோ என்னைக் கடிப்பதற்காகத்தான் இப்படிக் கேட்கிறார் என்பது புரிந்தது. நான் ஊடகத் துறைக்கு வருவதற்கு முதலே அவர் ஊடகரானவர். இதுபோன்ற பல பத்திகளை அப்போதே எழுதியவர்.

"சரியடாப்பா சொல்லன், இனி என்ன செய்யிறது நித்திரையை குழப்பிப்போட்டாய்தானே… சொல்லன்", என்றேன்.

அவர் கதை சொன்னார். வேறுவழி இன்றிக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

ஓர் ஊரில் எலித்தொல்லை. அதைப் பார்த்த ராஜா, "ஒரு செத்த எலி கொண்டு வந்தால் பத்து ரூபாய் தரப்படும்" என்று அறிவித்தார்.

மக்களும் நிறைய எலிகளைக் கொலைசெய்து பையில் போட்டு அரண்மனையில் கொடுத்துப் பணம் பெற்றுச்சென்றனர்.

அரண்மனை துர்நாற்றம் எடுக்க ஆரம்பித்தது. அரசன் உடனே செத்த எலியின் வாலைக் கொண்டு வந்தால் போதும் என்று அறிவித்தார்.

வாலைக் கொண்டு வந்து பரிசு வாங்கும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே இருந்தது.

ஆனால், எலித்தொல்லை குறையவில்லை. இது பற்றி அரசன் தீவிரமாக விசாரித்ததில்தான் தெரியவந்தது. பணம் கிடைக்குமே என்று மக்களே வீட்டில் எலி வளர்க்க ஆரம்பித்து விட்டார்கள்!

சிரிப்பு வந்தது. அடக்கிக்கொண்டே கேட்டேன். 'இந்தக் கதையைச் சொல்லவே இப்ப என்னை நித்திரையால எழுப்பினனீ?

"பின்ன என்ன தமிழ் மக்களுக்கு சரியான தலைமை இல்லை, புதிய தலைமை வேண்டும் எண்டு நீ எழுத எழுத எல்லோரும், தாங்களும் தலைவராகலாம் எண்டெல்லே யோசிக்கிறாங்கள்.

எலி வளர்த்ததால் காசு கிடைக்கும் எண்டு வளர்த்தாங்கள் பரவாயில்லை. அங்க என்னடா எண்டால் தலைவர் இல்லை எண்டு எழுத எழுத எல்லாரும் தாங்கள் தலைவராகலாம் எண்டெல்லோ யோசிக்கத் தொடங்கீற்றாங்கள்!"

இப்படிக் கூறிவிட்டு நண்பர் தொடர்பைத் துண்டித்துக்கொண்டார்.

இன்றைய பத்தியை எழுதிய அந்த நண்பருக்கு 'நன்றி நண்பா'!

**- ஊர்க்குருவி**

# கிளிநொச்சி ஆசிரியர்களுக்கு இன்று தடுப்பூசி!

கிளிநொச்சி, ஜூலை 08

கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் கீழ் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் அனைவருக்கும், இன்று வியாழக்கிழமை கொரோனா தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக, கிளிநொச்சி பிராந்திய தொற்றுநோயியல் மருத்துவ அதிகாரி மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.

இதற்கமைய, இன்று காலை 8 மணி முதல் பிற்பகல் நான்கு மணி வரை, கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்திலும், கிளிநொச்சி சாந்தபுரம் இராணுவ மருத்துவமனையிலும், பூநகரி மத்திய கல்லூரியிலும் தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் கீழ் ஆசிரியர்கள், பணியாளர்கள் என 3,328 பேர் கடமையாற்றுகின்றனர். எனவே, இவர்கள் மேற்படி நிலையங்களில் ஏதாவது ஒன்றுக்குச் சென்று, தங்களுக்குரிய தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும், அவர் தெரிவித்தார்.

## மண்டைதீவில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 08

மண்டைதீவில் வெற்றுக் காணி ஒன்றிலிருந்து 3 கைக்குண்டுகள் நேற்று மீட்கப்பட்டன.

விறகு எடுப்பதற்காக சென்ற கிராமவாசிகள் பொலிஸாருக்கு அளித்த தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைக்குண்டுகள் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## யாழ். மாநகரில் வர்த்தகர்மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 08

யாழ். மாநகர பகுதியில் இளம் வர்த்தகர் ஒருவர்மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வெட்டுக் காயங்களுக்கு இலக்கான 28 வயதான வர்த்தகர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பணக் கொடுக்கல் - வாங்கல் தொடர்பிலேயே இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-3)

## மணல் கடத்தல் 15 பேர் கைது!

மட்டக்களப்பு, ஜூலை 08

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றமை குறித்து, 13 ட்ராக்டர்களுடன், 15 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை பகுதியில், 11 ட்ராக்டர்களுடன், 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன், யாழ்ப்பாணம், அரியாலை பிரதேசத்தில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிச்சென்ற 2 பேர் ட்ராக்டர் ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேநேரம், அக்குரஸ்ஸ பகுதியில் 2 ட்ராக்டர்களுடன், 2 பேர் கைது செய்யப்பட்டனரெனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

**கல்வி TV CHANNEL-1**

**08.07.2021**

**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

**கல்வி TV CHANNEL - 2**

**08.07.2021**

**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu 08.07.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆனி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# இந்தியாவிடம் முறையிடுவதற்கு அப்பால்?

தமிழர் முற்போக்கு கூட்டணியினர் இந்திய தூதுவரை சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றனர். இதன்போது, 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் 16ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதை, அரசாங்கம் தொடர்ந்தும் இழுத்தடித்து வருகின்றது, மாகாண சபை தேர்தலை பிற்போட்டு வருகின்றது. இவை தொடர்பில் இந்தியா கரிசனை கொள்ள வேண்டும் – அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும், என்று, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அண்மையில் கூட்டமைப்பினரும் இந்திய தூதுவரை சந்தித்திருந்தனர். இதன்போது, இந்திய தூதுவர், மாகாண சபை தேர்தல் தொடர்பில் வலியுறுத்தியிருந்தார். மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு கூட்டமைப்பு அழுத்தங்களை கொடுக்க வேண்டும் என்னும் அடிப்படையில் இந்திய தூதுவர் பேசியிருந்தார். ஆனால், கூட்டமைப்பினர் இது தொடர்பில் பொதுவெளிகளில் பெரிதாகப் பேசவில்லை. கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் 13ஆவது திருத்தச்சட்டம், மாகாண சபை விவகாரம் தொடர்பில் இந்தியா பார்த்துக் கொள்ளும் என்னும் மனோபாவத்திலேயே செயல்பட்டு வருகின்றது. ஆனால், நிலைமைகள் அவ்வாறில்லை.

மாகாண சபை முறைமை தேவையானவர்கள் அது தொடர்பில் உரத்துப் பேசாதபோது, இந்தியா மாகாண சபை தொடர்பில் எவ்வாறு உரத்துப் பேச முடியும்? இந்தப் பின்புலத்தில் தமிழர் முற்போக்கு கூட்டணி மிகவும் தெளிவாக மாகாண சபை விவகாரம் தொடர்பில் பேசியிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், இந்த விடயத்தில் இந்தியாவிடம் முறையிடுவதற்கு அப்பால் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைத்திட்டம் தேவை.

அதாவது, 13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் இருக்கும் மாகாண சபை முறைமையை பாதுகாப்பது. அதேவேளை, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழர் முற்போக்கு கூட்டணி ஆகியவற்றுக்கு இடையில் ஒருங்கிணைந்த வேலைத்திட்டம் ஒன்றும் தேவை. வெறுமனே, இந்திய தூதரகத்திடம் முறைப்பாடுகளை முன்வைப்பதால் மட்டுமே இந்த விவகாரத்தை கையாள முடியாது. பாதிக்கப்பட்ட தரப்புக்கள் இந்த விடயத்தில் எந்தளவு உறுதியாகவும் - தெளிவாகவும் இருக்கின்றனவோ, அந்த அளவிற்கே இந்தியா இந்த விடயத்தில் தலையீடு செய்யும்.

இந்தியாவிற்கு இந்த விடயத்தில் ஒரு கடப்பாடு உண்டு என்பது எந்தளவு உண்மையோ, அந்தளவிற்கு பாதிக்கப்பட்ட தரப்புக்கள் இந்த விடயத்தில் உறுதியாக இருக்க வேண்டியதும் அவசியம். முக்கியமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தவேண்டும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத்தச் சட்டம் ஒன்றே தமிழ் மக்களின் அரசியல் தீர்வை இப்போதும் உயிர்ப்பாக வைத்திருக்கின்றது. அதனைவிடவும் ஓர் உயர்ந்த விடயத்தை தமிழர்கள் எதிர்பார்க்கலாம். ஆனால், அதனை வெறுமையிலிருந்து உரையாட முடியாது. மேலும், இந்தியாவின் ஆதரவை இதற்கு அப்பால் தற்போது பெற முடியாது.

இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அதற்கான ஒரு பொறிமுறையை கண்டுபிடிக்க வேண்டும்.

# இலங்கை விவகரத்தில் ஏமாளியாகவே இருக்கும் சர்வதேச சமூகம் !

- அலசுவது இராஜதந்திரி -

அமெரிக்கா இருபது வருடங்களுக்குப் பின்னர், ஆப்கானிஸ்தானிலிருந்து ஓரிரு தினங்களுக்கு முன்னர் தனது படைகளை வாபஸ் பெற்றுக்கொண்டது. அல்கொய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனை வேட்டையாடும் விதத்திலும் அந்த அமைப்புக்கு ஒத்தாசையாக இருந்த தலிபான்களை ஒடுக்கும் விதத்திலும் அமெரிக்கா 2001ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டு ஜூலை வரை 20 வருடங்கள் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்த அமெரிக்கா, நியூயோர்க் இரட்டைக்கோபுர தாக்குதல் சூத்திரதாரியான ஒசாமா பின்லேடனை கொல்வதில் வெற்றி கண்டிருக்கலாம். ஆனால், ஆப்கானிஸ்தானில் தலிபான்களை ஒடுக்குவதில் அமெரிக்கா தோல்வியை தழுவிய நிலையில் தற்போது ஆப்கானிஸ்தானிலிருந்தும் வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளது. அமெரிக்கா ஓர் இராணுவ வல்லரசாகும். அத்துடன் அமெரிக்காவின் நேச நாடுகளும் இராணுவ ரீதியாக பலம் பொருந்தியவையாகவும் சர்வதேச சமூகத்தில் அரசியல் ரீதியாக பலம்பொருந்தியவையாகவும் இருக்கின்றன.

**சர்வதேச சமூகத்தின் தோல்வி**

இருந்தபோதிலும் ஆப்கானிஸ்தானில் எவ்வகையிலும் அமெரிக்காவினால் தலிபான்களை முறியடிக்க முடியவில்லை. அத்துடன், சர்வதேச சமூகத்தினாலும் அமெரிக்காவின் ஆப்கானிஸ்தானை தலிபான்களின் பிடியிலிருந்து மீட்கும் இருபது வருடகால முயற்சிக்கு எத்தகைய வெற்றிகரமான பங்களிப்பையும் அரசியல் ரீதியாகவோ அல்லது இராணுவ ரீதியாகவோ வழங்கமுடியவில்லை.

இத்தகைய பின்னணியில் அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் ஆரோக்கியமாக எதனையும் மேற்கொள்ள முடியாத நிலையில் தற்போது பின்வாங்கியுள்ளது. இதனால், அமெரிக்காவின் மீது நம்பிக்கை வைத்திருந்த ஆப்கானிஸ்தான் அரசியல்வாதிகள் பலரும் தற்போது தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். இதேவேளை, இஸ்லாமிய அடிப்படைவாத தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் பல பிரதேசங்களை விரைந்து தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தவண்ணமுள்ளனர்.

**வியட்நாம் - மியன்மார் அனுபவங்கள்**

ஏறத்தாழ ஆப்கானிஸ்தானில் போன்றே சில தசாப்தங்களுக்கு முன்னர் வியட்நாமிலிருந்தும் அமெரிக்கா தனது இராணுவ நவடிக்கைகளில் தோல்விகண்டு வெளியேறியிருந்தது.

இதேவேளை, அண்மையில் மியன்மார் தேசத்தில் ஜனநாயக ரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட ஆங்சாங் சூகியின் ஆட்சியை இராணுவத்தினர் கவிழ்த்திருந்தனர்.மியன்மார் விவகாரத்தில்கூட சர்வதேச சமூகத்தினால் ஜனநாயக ரீதியாக தெரிவான ஆங்சாங் சூகியின் ஆட்சியைக் காப்பாற்றவோ அல்லது அந்நாட்டில் இராணுவ ஆட்சியை அகற்றவோ முடியாதிருந்தது.

இந்நிலையில், சர்வதேச சமூகம் தனது கரிசனையை வெளியிடலாம். ஆனால், ஓரளவுக்கு மேலாக அதனால் ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங் களில் கூடுதலாக தலையிட முடியாது.

வடக்கு - கிழக்கு பிரச்னையைப் பொறுத்தவரை சர்வதேச பங்களிப்பு எவ்வாறு இருந்ததென்பதை நன்கறிந்திருக்கக் கூடியதாக அமைந்திருந்தது.

நோர்வே மேற்கொண்ட இலங்கையின் வடக்கு - கிழக்கு சமரச முயற்சிகளில் அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் அனுசரணையாளர்களாக பங்கேற்றிருந்தன.

**சர்வதேச சமூகத்தின் தோல்வி**

ஆயினும், சமரசத்தை மேற்கொள்வதிலும் இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னையில் நோர்வேக்கு பக்கபலமாக இருந்த சர்வதேச சமூகம் தோல்வியையே தழுவியிருந்தது.


இதுதவிர 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக்கட்ட வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்துவதில்கூட சர்வதேச சமூகத்தினால் எதனையும் காத்திரமாக மேற்கொண்டிருக்க முடியவில்லை. இந்நிலையில், தொடர்ந்தும் சர்வதேச சமூகம் வடக்கு - கிழக்கு பிரச்னைத் தீர்வுக்கு இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு அழுத்தங்களை வழங்கும் என்று எதிர்பார்ப்பது 'முடவன் கொம்புத்தேனுக்கு ஆசை'ப் பட்ட கதையாகவே இருக்கமுடியும்.

இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னையைப் பொறுத்தவரை ஜெனிவாவின் மனித உரிமைகள் பேரவை தீர்மானங்கள்கூட வலுவிழந்தவையாகவே இருக்கின்றன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜெனிவா தீர்மானத்தை ஏற்கப்போவதில்லை என்பதைத் தெளிவாக அறிவித்துள்ளார். இந்நிலையில் இந்தியாவோ அல்லது சர்வதேச சமூகமோ இலங்கையின் வடக்கு - கிழக்கு விவகாரத்தில் இலங்கை அரசை குறிப்பாக இன்றைய அரசை வழிக்குக் கொண்டுவர அழுத்தங்களை வழங்கமுடியுமென்று எதிர்பார்க்க முடியாது.

கடந்த செவ்வாய்கிழமை பாராளுமன்றில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், இலங்கையின் வடக்கு - கிழக்கு விவகாரம் தொடர்பில் ஆட்சியாளர்களால் மட்டுமல்ல. வடக்கு - கிழக்கின் அரசியல் தரப்பினால்கூட சர்வதேச சமூகம் ஏற்கனவே ஏமாறியுள்ள நிலையே காணப்படுகின்றது.

இந்நிலையில், இலங்கை விவகாரத்தில் ஏற்கனவே ஓர் ஏமாளியாகவும் இனி ஏமாறுவதற்கு எதுவுமில்லை என்றிருக்கின்ற சர்வதேச சமூகத்தை இலங்கை அரசு ஏமாற்ற முனைகின்றது என்று குறிப்பிடுவது ஓர் அர்த்தமற்ற கருத்தாகவே இருக்க முடியும். •

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 08 வியாழக்கிழமை
பிலவ வருடம் - ஆனி 24
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : சதுர்த்தசி



## இன்றைய ராசிபலன்

08.07.2021

**மேடம்**
சிலருக்கு பதவி பொறுப்பு கிடைக்கும். நன்மை காணும் நாள். எப்போதோ வரவேண்டிய பணவரவு வரும். உற்சாகம் கூடும். இதுவரை ஏற்பட்ட நெருக்கடி தீரும். பயம் விலகும்.

**இடபம்**
இழுபறி முடிவுக்கு வந்து நிம்மதியாகும். குடும்பத்தினருக்கு ஆதாயம் வருவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. பணியிடத்தில் இருந்து வந்த பிரச்னைகள் தீரும்.

**மிதுனம்**
பொறுமைக்கு விடை கிடைக்கும். பொறாமை வேண்டாம். பரபரப்புக் குறையும். வேற்று மனிதர்களிடம் கவனம் தேவை. மனதில் தேவையே இல்லாத பயம் வந்து மறையும்.

**கடகம்**
பெற்றோர் உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள். விட்டுக்கொடுத்து போவீர்கள். கலகலப்பான சந்திப்பு உண்டு. உறவினர்களால் நன்மைகள் ஏற்பட வாயப்புண்டு.

**சிம்மம்**
விவகாரம் ஒன்றில் நல்ல முடிவு ஏற்படும். கவனம் சிதறாமல் பணியில் மட்டும் ஈடுபடுங்கள். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்பு நல்லபடியாக முடியும்.

**கன்னி**
உங்களிடம் பொறாமைக்காரர்கள் வலுவிழப்பார்கள். எந்த செயலிலும் சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**துலாம்**
பிறர் தவறுகளை சுட்டிக் காட்டி சண்டையிடுவீர்கள். தொழில் முதலீடுகளைச் சற்றே தள்ளிப்போடுவது நல்லது. வியாபார ஒப்பந்தப் பேச்சுக்களை இன்று தவிர்க்கவும்.

**விருட்சிகம்**
திருமண முயற்சியை ஓரிரு நாட்களுக்கு ஒத்திப் போடுங்கள். வாழ்வில் குதுாகலம் அடைவீர்கள். கவனமாக பேசுங்கள். எதிர்பார்த்த தகவல் வராது. எதிர்பாராத அதிர்ஷ்டம் வரும்.

**தனுசு**
வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். வெளியூர் பயணங்களால் பெரிய நன்மை இல்லை. அரசு அதிகாரிகளை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**மகரம்**
புதிய முயற்சிகளில் சிந்தித்து செயல்படுவது நல்லது. மந்த நிலை இருக்கும். தொழில்துறைப் பணி சீராக நடக்கும். வீண்வதந்திகளை பேசி வம்பில் மாட்ட வேண்டாம்.

**கும்பம்**
முயற்சிகளில் பலன் கிட்டும். உற்சாகமாக இருப்பீர்கள். பிறருக்கு நன்மை செய்ய முயன்று பிரச்னைக்கு ஆளாகலாம். வெளிநாட்டுப் பணி விஷயங்களில் வெற்றி கிடைக்கும்.

**மீனம்**
குடும்பத்தில் அமைதி நிலவும். பாராட்டு கிடைக்கும். மனதளவில் முன்பை விட நிம்மதியாக இருப்பீர்கள். நீண்ட கால முயற்சியில் நற்பலன் கிடைக்கும்.

# பா.ஜ.கவால்தான் அ.தி.மு.க. தோற்றதா? சர்ச்சையை ஏற்படுத்திய சண்முகம்!





சென்னை, ஜூலை, 08

பா.ஜ.கவால்தான் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. தோற்றது என முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்தின் கருத்தை அதிமுக தலைமை ஏற்கிறதா என பா.ஜ.கவினர் கேள்வி எழுப்பியுள்ளனர். முன்னாள் அமைச்சரின் கருத்து சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே இது தொடர்பில் பா.ஜ.க. கேள்வி எழுப்பியுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் வானூர் ஒன்றிய அ.தி.மு.க. சார்பில் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முன்னாள் சட்டத்துறை அமைச்சரும், அ.தி.மு.க. மாவட்டச் செயலாளருமான சி.வி. சண்முகம் பங்கேற்றுப் பேசினார்.

அவர் பேசுகையில், “பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்ததால் தான், சிறுபான்மையினரின் வாக்குகளை நாம் முழுமையாக இழந்துவிட்டோம். விழுப்புரம் தொகுதியில் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் 20 ஆயிரம் வாக்குகள் உள்ளன. இதில் விழுப்புரம் நகரத்தில் மட்டும் 18 ஆயிரம் வாக்குகள் உள்ளன. இவற்றில் 16 ஆயிரம் வாக்குகள் குறைந்துள்ளன.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சி மீது மக்களுக்குக் கோபம் கிடையாது. கடந்த 10 ஆண்டுகளாக நல்ல திட்டங்களைச் செயல்படுத்தியதன் காரணமாக மக்கள் மத்தியில் நல்ல பெயர் இருந்தது. அதனால் மக்கள் வாக்களிக்கத் தயாராக இருந்தார்கள். ஆனால், கூட்டணி கணிப்பு சரியாக இல்லை. சிறுபான்மையினர் வாக்குகள் மற்றும் சில காரணங்களால் நாம் தோல்வியைச் சந்திக்க நேரிட்டது. இல்லை என்றால் தி.மு.க. ஆட்சிக்கு வந்திருக்க முடியாது அப்படி அவர்கள் வந்திருந்தாலும் கூட்டணி ஆட்சியைத்தான் அமைத்திருக்க முடியும்” எனக் கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் எஸ்.ஆர்.சேகர், “முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகத்தின் கருத்தை ஓ.பி.எஸ்., இ.பி.எஸ். இரு வரும் ஏற்கிறார்களா? என்று பதில் சொல்ல வேண்டும். இல்லையெனில் நடவடிக்கை எடுக்க வேண்டும். சி.வி.சண்முகம் மன்னிப்பு தெரிவிக்க வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்

# மருத்துவ சிகிச்சை முடிந்து ரஜினிகாந்த் இன்று காலை சென்னை திரும்புகிறார்



சென்னை, ஜூலை 08

மருத்துவ சிகிச்சைக்கு அமெரிக்கா சென்றுள்ள நடிகர் ரஜினிகாந்த் இன்று அதிகாலை சென்னை திரும்புகிறார்.

நடிகர் ரஜினிகாந்த் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட பின்னர் அவ்வப்போது அமெரிக்கா சென்று உடல் பரிசோதனை செய்து வந்தார். சில மாதங்களுக்கு முன்பு ஹைதராபாத்தில் அண்ணாத்த படப்பிடிப்பில் பங்கேற்றபோது அவருக்கு இரத்த அழுத்த பிரச்னைகள் ஏற்பட்டன.

இதையடுத்து அங்குள்ள ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். சமீபத்தில் மீண்டும் ஹைதராபாத் சென்று படப்பிடிப்பில் பங்கேற்றார். தான் நடிக்க வேண்டிய காட்சிகள் அனைத்தையும் முடித்து கொடுத்து விட்டு சென்னை திரும்பிய அவர் கடந்த 19 ஆம் திகதி அமெரிக்கா புறப்பட்டு சென்றார்.

அங்கு மாயோ மருத்துவமனையில் ரஜினிகாந்த் மருத்துவ பரிசோதனைகள் செய்து கொண்டார். அவருக்கு பல்வேறு உடல் பரிசோதனைகள் செய்யப்பட்டன. மருத்துவ சிகிச்சை முடிந்து நடிகர் ரஜினிகாந்த் இன்று அதிகாலை சென்னை திரும்புகிறார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# வைகோ மீது தொடரப்பட்ட வழக்கு இரத்து

சென்னை, ஜூலை 08

நக்கீரன் ஆசிரியர் கோபால் கைதை கண்டித்து போராட்டம் நடத்திய ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோ மீதான வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் நேற்று இரத்து செய்துள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பேராசிரியை நிர்மலா தேவி குறித்து வெளியான நக்கீரன் கட்டுரைகளில் ஆளுநர் மீது அவதூறு செய்திகளைப் பரப்புவதாகவும், ஆளுநரை பணி செய்ய விடாமல் தடுத்ததாகவும் ஆளுநர் மாளிகை அதிகாரி புகார் அளித்ததின் பேரில் நக்கீரன் ஆசிரியர் கோபால், கைது செய்யப்பட்டு தேசத் துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் விடுவிக்கப்பட்டார்.

நக்கீரன் ஆசிரியர் கோபால் கைது செய்யப்பட்டமையை கண்டித்து ஊடகத்துறையினர் போராட்டத்தில் குதித்தனர். பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கோபால் கைதுக்கு கண்டனம் தெரிவித்தனர். அப்போது நக்கீரன் கோபாலை சந்திக்க சென்ற வைகோவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் அவர் சிந்தாதிரிப் பேட்டை காவல் நிலையம் முன்பு சாலை யில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். இதைத் தொடர்ந்து சிந்தாதிரிப் பேட்டை பொலிஸார் வைகோவை கைது செய்தனர். இந்த வழக்கை நேற்று விசாரித்த சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி நிர்மல்குமார், வைகோ உள்பட 5 பேர் மீதான வழக்கை இரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்.



## தோட்டாக்களுடன் பொதி மீட்பு

அம்பாறை, ஜுலை 8

வீடொன்றில் இருந்து 15 தோட்டாக்கள் அடங்கிய பொதியொன்றை நேற்று மதியம் கல்முனை பொலிஸார் மீட்டனர்.

அம்பாறை, கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை 5ஆம் கிராமசேவகர் பிரிவு அல்-ஹம்றா வீதியில் உள்ள வீடொன்றின் கூரையில் எம்-16 ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் தோட்டாக்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

துப்பாக்கித் தோட்டாக்கள் மீட்கப்பட்ட வீட்டு உரிமையாளர் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். கல்முனை பொலிஸ் விசேட பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இச்சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றவர்கள் கைது

மட்டக்களப்பு, ஜுலை 08

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றவர்கள், மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

அண்மையில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக இராஜாங்க அமைச்சரின் மெய்ப் பாதுகாவலரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

அவரது மரணத்துக்கு நீதி வேண்டி, நேற்று அவரது பெற்றோர்கள் உள்ளிட்ட பொது மக்கள், மட்டக்களப்பு - காந்தி பூங்காவுக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்வதற்கு முயற்சித்தனர்.

இதன்போது அங்கு வருகை தந்த பொலிஸார், தனிமைப் படுத்தல் சட்டத்தின்படி ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வருகை தந்த பஸ்ஸின் சாரதி உட்பட உயிரிழந்த இளைஞரின் பெற்றோர் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை செல்வதை மீளாய்வு செய்யுங்கள்

### தனது பிரஜைகளுக்கு அமெரிக்கா அறிவுறுத்தல்

**கொழும்பு, ஜுலை 08**

**இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்து வருவதன் காரணமாக இலங்கைக்கான பயணங்களை மேற்கொள்வது தொடர்பில் அமெரிக்கப் பிரஜைகள் மீளாய்வு செய்வது சிறந்ததாகும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தமது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியிருக்கிறது.**

அமெரிக்கப் பிரஜைகள் இலங்கைக்குப் பயணம் செய்வது குறித்த அறிவிப்பொன்று கடந்த மே மாதம் 24 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்தது.

அந்த அறிவிப்பில் 'இலங்கைக்கு செல்வது குறித்து மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்' என்பதைக் குறிக்கும் 3 ஆம் மட்ட எச்சரிக்கையானது, 'இலங்கைக்கு செல்ல வேண்டாம்' என்பதைக் குறிக்கும் 4 ஆம் மட்ட எச்சரிக்கையாக மாற்றப்பட்டிருந்தது. எனினும், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் அமெரிக்கப் பிரஜைகளுக்கு விடுக்கப்பட்ட 4 ஆம் மட்ட எச்சரிக்கை தற்போது மீண்டும் 3 ஆம் மட்ட எச்சரிக்கையாக மாற்றப்பட்டிருக்கிறது.

அதன்படி அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையப்பக்கத்தில் நேற்றுமுன்தினம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள பயண அறிவுறுத்தலில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்திருப்பதன் காரணமாக இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதேவேளை, இலங்கையில் தீவிரவாத நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களும் அதிகரித்துள்ளன.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் மிகவும் உயர்வடைந்திருப்பதைக் காண்பிக்கும் வகையில் அமெரிக்காவின் தொற்றுநோய்ப்பரவல் கட்டுப்பாடு மற்றும் ஒழிப்பு நிலையமானது, இலங்கை தொடர்பில் 3 ஆம் மட்ட சுகாதார எச்சரிக்கை அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு செல்லும் அமெரிக்கப் பிரஜைகள் முழுமையாகத் தடுப்பூசியைப் பெற்றிருப்பின் அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதற்கும் தீவிரமான அறிகுறிகள் தென்படுவதற்குமான வாய்ப்பு மிகவும் குறைவாகும். இருப்பினும் இலங்கைக்கு செல்வது தொடர்பில் மீளாய்வு செய்வதும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அங்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் பற்றி அறிந்து கொள்வதற்கு அமெரிக்கத்தூதரகத்தின் கோவிட் - 19 குறித்த இணையப்பக்கத்தைப் பார்வையிடுவதும் வரவேற்கத்தக்கதாகும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏற்கனவே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்டிருந்த தீவிரவாதத் தாக்குதல் அச்சுறுத்தல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளுக்கு ஏதேனும் அவசர உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் அதனை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட வளங்களையும் வசதிகளையுமே அமெரிக்க அரசாங்கம் கொண்டிருக்கின்றது என்றும் அவ்வறிவித்தலில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 954 தொற்றாளர்

### அரசாங்க அதிபர் தகவல்

கிளிநொச்சி, ஜுலை 08

954 தொற்றாளர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் தற்போது பாதுகாப்பான நிலை உருவாகி வருகின்றது என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கொவிட் தடுப்பூசி மற்றும் தொற்று நிலவரம் தொடர்பான ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை காலமும் 954 பேர் கோவிட் 19 தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். அதில் 281 பேர் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். ஏனையோர் ஏற்கனவே சிகிச்சை பெற்று வீடுகளிற்கு திரும்பியவர்களாக காணப்படுகின்றார்கள்.

அதேபோன்று அண்மைக்காலமாக அதிகளவான தொற்றாளர்கள் மாவட்டத்தில் இனம் காணப்படவில்லை. ஆகவே, எமது மாவட்டம் பாதுகாப்பான சூழலிலேயே காணப்படுகின்றது-என்றார்.



# மைத்திரி தலைமையில் விசேட கூட்டம் இன்று

கொழும்பு, ஜுலை 08

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த கூட்டம் இன்று இடம்பெறவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

இதன்போது, நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் கட்சியின் எதிர்கால அரசியல் நடவடிக்கை குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் பிற்பகல் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, செயல்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

# காணாமல்போன நெடுந்தீவு மீனவர் தமிழகக் கரையில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜுலை 08

ஒரு வாரமாக காணாமல் போன நெடுந்தீவு மீனவர், தமிழகம் வேதாரணியம் கடற்கரையில் நேற்று புதன்கிழமை சடலமாக மீட்கப்பட்டார் என்று தமிழக செய்திகள் தெரிவித்தன.

நெடுந்தீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சில்வெஸ்ரர் மரியதாஸ் என்ற மீனவரே சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நெடுந்தீவு கடற்கரையிலிருந்து கட்டுமரம் ஒன்றில் அவர் தொழிலுக்குச் சென்றுள்ளார்.

எனினும் அவர் கடந்த ஒரு வாரமாக கரை திரும்பவில்லை என்று குடும்பத்தினர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அவரது சடலம் தமிழகம் வேதாரணியம் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ள நிலையில் நேற்று மீட்கப்பட்டதாக தமிழக செய்திகள் தெரிவித்தன.

# சந்தைக் கட்டடத்தை பயனுள்ளதாக மாற்றுக!

### ஐயன்குளம் விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜுலை 08

முல்லைத்தீவு - ஐயன்கன்குளம் சந்தைக் கட்டடத்தை, நெல் கொள்வனவு நிலையமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்னர் திறக்கப்பட்ட இச்சந்தைக் கட்டடம், இதுவரை காலமும் இயங்கவில்லை எனத் தெரிவித்த அப்பகுதி விவசாயிகள், இக்கிராமத்தில் கூடுதலான மக்கள் மரக்கறி உற்பத்தியில் ஈடுபடுவதன் காரணமாகவே, சந்தைப் பக்கம் வருவதில்லை எனவும், இதனாலேயே சந்தை இயங்காமல் இருப்பதாகவும் கூறினர்.

இந்நிலையில், இந்தச் சந்தைக் கட்டடத்தை, நெல் கொள்வனவு நிலையமாகவோ அல்லது பல்பொருள் விற்பனை நிலையமாகவோ மாற்றுவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கவேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# துப்பாக்கி பிரயோகத்தில் 52 வயது நபர் உயிரிழப்பு

கொழும்பு, ஜுலை 08

கதிர்காமம்-நாகவீதி-சமுர்த்தி வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 52 வயதான நபரொருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

தனிப்பட்ட காரணத்தால் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த நிலையில், குறித்த நபர் தெபருவெவ ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளதுடன், கதிர்காமம் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

# பந்துல கூறுவதை அவரின் மனைவியே கேட்பதில்லை

## சபையில் அநுரகுமார கிண்டல்

கொழும்பு, ஜுலை 08

அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறாதது ஒன்றுமே இல்லை. அவருடைய கூற்றை அவரின் மனைவியே கேட்பதில்லை எனத் தெரிவித்த அநுரகுமார திஸநாயக்க எம்.பி, குடும்பமொன்றை நடத்துவதற்கு 2,500 ரூபாய் மாதமொன்றுக்கு போதுமென்றார், நிவாரணம் வழங்கப்படும் என்றார். உரமானியம் வழங்கப்படும் என்றார், ஒன்றுமே நடைபெறவில்லை. ஆகையால், கொஞ்சம் அமருங்கள்-என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு, ஊடகங்கள் மீதான அடங்குமுறை தொடர்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“வர்த்தமானி அறிவித்தலுக்கும் இந்த அரசாங்கத்துக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. மக்களின் குரலுக்கு செவிசாய்க்காது அடக்குமுறையையே இந்த அரசு முன்னெடுக்கின்றது என்றும் அநுரகுமார கூறினார்.

# ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்திலேயே ஆதரவு இழந்த ஒரே அரசு இதுதான்!

## சபையில் ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜுலை 08**

**சேர் பெயில். மஹிந்த ராஜபக்ஷவும் பெயில். ராஜபக்ஷக்களும் பெயில். கோட்டாபயவும், மஹிந்தவுமே தீர்வு என பின்னால் ஓடிப் போனவர்கள் இன்று பஸில் ராஜபக்ஷ வரட்டும் எனக் காத்திருக்கிறார்கள். பஸில் 10 சதவீதம் தரகுப்பணம் வாங்குபவர் எனச் சொல்வார்கள். இனி என்ன நடக்கிறதெனப் பார்ப்போம் என பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார.**



நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிரச ஊடகத்தின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்ய அரசு முயற்சிக்கிறது. தமக்கு எதிரான குரல்வளையை தடுப்பதற்காக இதனை செய்கிறார்கள். ஊடகங்களின் குரல்வளையை அடக்கி, உங்கள் மீதான விமர்சனத்தை இல்லாமலாக்க முடியாதென்பதை அரசுக்கு தெரிவிக்கிறோம்.

நாட்டை விற்பதை, மோசடிகளை ஊடகங்கள் வெளிப்படுத்துவது தவறா?

அரசாங்கத்தின் ஆதரவாளர் ஒருவர் பல வலைத்தளங்களை வாங்கினார். இன்று என்ன நடக்கிறது. சமூக ஊடகங்களில் 70 வீதத்திற்கும் அதிகமானவற்றில் அர சாங்கத்துக்கு எதிராகவே கருத்து தெரிவிக்கப்படுகிறது.

அனைத்தும் இன்று ராஜபக்ஷக்கள்தான். உலகில் எங்கும் குடும்ப ஆட்சியை மேற்கொண்டவர்களின் ஆட்சி நிலைத்ததில்லை.

பஸில் நாளை வரப்போகிறாராம். வெடிகொளுத்தி பால் சோறு தயாரிக்கத் தயாராகிறார்கள். ஆனால், மக்களால் முடியுமா? அரிசியின் விலை என்ன? அரிசி மாபியாவை அடக்கப்போவதாக கூறி ஆட்சிக்கு வந்தார்கள். இன்று என்ன நடக்கிறது. அதை கட்டுப்படுத்த முடியவில்லை.

இலங்கையில் ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்திலேயே மக்களின் ஆதரவை இழந்த ஒரே அரசு இதுதான்-என்றார்.

# புலம்பெயர் தமிழ் அமைப்புகளால் சிங்களவர்களுக்கு அச்சுறுத்தல்!

## சபையில் தயாசிறி குற்றச்சாட்டு



கொழும்பு, ஜுலை 08

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் வெளிநாடுகளில் இருந்து செய்யும் பொய்ப் பிரசாரங்கள் காரணமாக அந்தந்த நாடுகளில் வாழும் சிங்களவர்களுக்கு அச்சுறுத்தல் நிலையொன்று உருவாகியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக கூறும் பொய்ப் பிரசாரங்களை நிறுத்த, அரசாங்கம் தலையிட்டு, முறையான வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்கவேண்டும் எனவும் இராஜாங்க அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்த) சட்ட மூலம் தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இங்கு கூறும் விடயங்களை புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் இந்த காரணிகளை கையில் எடுத்துக் கொண்டு அதில் அவர்கள் எவ்வாறு வாழ்கின்றனர், பின்னர் எமக்கு எதிராக எவ்வாறு செயல்படுகின்றனர் என்பது குறித்து நாம் கவனம் செலுத்தாது உள்ளோம்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் மிகப்பெரிய இனப்படுகொலை இடம்பெற்றதாகவும், அதில் தமிழ் மக்களுக்கு பாரிய அழிவு ஏற்பட்டது, 40 ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றெல்லாம் சர்வதேச புலம்பெயர் தமிழ் அமைப்புகள் பிரசாரம் செய்துகொண்டுள்ளது.

இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அடித்தளம் போட்டு வருகின்றது. கூட்டமைப்பினர் இங்கு பேசுவதைக் கொண்டே பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மூன்று இலட்சம் மக்கள் நெருக்கடி நிலையில் இருந்து இராணுவத்தினால் காப்பற்றப்பட்டனர். இந்த மூன்று இலட்சம் மக்களையும் கொன்று குவித்திருந்தால் இவர்கள் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால், இராணுவம் இவர்களைக் காப்பாற்றியது. இப்போது கனடாவில் இனப்படுகொலை வாரம் என அனுஷ்டிக்கும் நிலை உருவாகியுள்ளது. இதனால் அடுத்த பரம்பரை தமிழ் மக்கள் இலங்கையில் அடக்குமுறை இடம்பெறுவதாக நினைப்பார்கள்.

எனவே, இவ்வாறான நடவடிக்கைகளை அரசாங்கம் நிறுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கவேண்டும். தமிழ் அமைப்புகளின் இந்த செயலுப்பாடுகள் காரணமாக அங்கு வாழும் சிங்களவர்களுக்கு அச்சுறுத்தல் நிலையே உருவாகியுள்ளது.

இது கனடாவில் மட்டுமல்ல, தமிழ் புலம்பெயர் அமைப்புகள் இருக்கும் சகல இடங்களிலும் இவ்வாறான செயலுப்படுகள் இடம்பெற்றால் அங்கு வாழும் சிங்கள மக்களுக்கு பாரிய அச்சுறுத்தல் நிலையொன்று உருவாகும். எனவே, இதனை நிறுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்-என்றார். (அ)



# மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த முதலை சிக்கியது

திருமலை, ஜுலை 08

திருகோணமலையில் மக்கள் குடியிருப்புக்குள் முதலை ஒன்று புகுந்ததால் அங்கு பரபரப்பான நிலை ஏற்பட்டது.

திருகோணமலை 4ஆம் கட்டை சிங்ஹபுர பகுதியில் உள்ள வீடொன்றினுள் அந்த முதலை புகுந்ததால் அப்பகுதிவாசிகள் பதற்றமடைந்து வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் வழங்கினர்.

இந்தநிலையில், அந்த இடத்திற்கு சென்ற வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் சிரமங்களுக்கு மத்தியில் முதலை மீட்கப்பட்டது.

நான்கு அடி நீளம் கொண்ட அந்த முதலை, ஆண்டான் குளம் பகுதியில் உள்ள வனப் பகுதியில் விடுவிக்கப்பட்டதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

# ‘லாம்ப்டா’ குறித்து எச்சரிக்கை!

கொழும்பு, ஜுலை 08

கொரோனா வைரஸின் புதிய மாறுபாடான லாம்ப்டா சுமார் 30 நாடுகளில் பரவியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதை தடுக்க இலங்கை எச்சரிக்கையாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

லாம்ப்டா தற்போதைய கொரோனா தடுப்பூசிகளுக்கு கூட கட்டுப்படாது என்றும் குறிப்பிடப்படுகின்றது. முகக்கவசம் அணிவது மற்றும் சமூக தொலைதூரத்தை கடைப்பிடிப்பது உள்ளிட்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்குமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை கேட்டுக்கொண்டனர்.

கொரோனா வைரஸின் விளைவாக நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் இந்த வாரம் தளர்த்தப்பட்டன. ஆனால், ஏற்கனவே நடைமுறையில் உள்ள சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

“என்ன மாறுபாடு என்பது முக்கியமல்ல. எந்தவொரு பரவலையும் தடுக்க சுகாதார வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுவது முக்கியம்” என்று சுகாதார சேவைகள் துணை இயக்குநர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் கூறினார்.

பிரிட்டனில் மெதுவாக பரவத் தொடங்கியிருக்கும் ‘லாம்ப்டா’ கொரோனா சற்று மாறுபாடான ஆபத்தை விளைவிக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பெரு நாட்டில் முதல்முறையாக அடையாளம் காணப்பட்ட இந்த ‘லாம்ப்டா’ கொரோனா நோயாளிகளில் சற்று மாறுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பம்!

கொழும்பு, ஜுலை 08

கொரோனா வைரஸுக்கு எதிராக அஸ்ட்ரா செனகாவின் முதல் டோஸைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இரண்டாவது டோஸாக பைசர் தடுப்பூசியை செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக இலங்கைக்குக் கிடைத்துள்ள 26 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள் கொழும்பு -1 இலிருந்து கொழும்பு -15 வரையுள்ள 55 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு செலுத்தப்படவுள்ளன.

தடுப்பூசி வழங்கப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் தொடர்பான விவரங்கள் குறுந் தகவல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக கோவிட்-19 தொற்றைத் தடுக்கும் தேசிய செயல்பாட்டு மையத்தின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

வைத்திய மத்திய நிலையங்கள் மற்றும் நடமாடும் நிலையங்கள் மூலமாக இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(அ)

# அரசுக்கு 20 ஆம் திகதியன்று மற்றுமொரு பலப்பரீட்சை!

## கூட்டணி ஒற்றுமை காக்கப்படுமா?

**கொழும்பு, ஜூலை 08**

**வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது ஜூலை 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் விவாதம் நடத்தப்பட்டு 20 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படும். பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியபோதே இந்த முடிவு எட்டப்பட்டது.**

எரிபொருட்களின் விலை அதிகரிப்பையடுத்து அதனை அடிப்படையாகவும் மேலும் சில காரணங்களை முன்னிலைப்படுத்தியும் வலுசக்தி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கடந்த மாதம், ஐக்கிய மக்கள் சக்தியால் கையளிக்கப்பட்டது.

இப்பிரேரணையை தோற்கடிப்பதற்கான பெரும்பான்மையை அரசு கொண்டிருந்தாலும், சிறீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள பஸில் ஆதரவு அணி உறுப்பினர்கள் எத்தகைய முடிவை எடுப்பார்கள் என இன்னும் உறுதியான தகவல் வெளியாக வில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டணி உள்ளிட்ட எதிரணிகள் எதிர்த்து வாக்களிக்கவுள்ளன. தமிழ்க் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் அதிகாரபூர்வ முடிவு இன்னும் வெளிவரவில்லை.

சிறீலங்கா பொதுஜன பெரமுன வசம் 145 ஆசனங்கள் உள்ளன. கூட்டு கட்சிகளையும் சேர்த்து 149 ஆசனங்கள் உள்ளன. எனவே, 140 இற்கும் குறைவான வாக்குகளை அரசு பெறும்பட்சத்தில் அது கூட்டணி அரசுக்கான பின்னடையாகவே கருதப்படும். சில வேளை பஸில் அணி உறுப்பினர்கள் சிலர் வாக்கெடுப்பில் பங்கேற்காவிட்டால்கூட அது அரச கூட்டணிக்குள் உள்ள குழப்பத்தை வெளிப்படுத்தும்.

சிலவேளை, 20 இற்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம் எம்.பிக்களின் ஆதரவையும் பெற்று மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு அதிக வாக்குகளை பெற்று பிரேரணையை ஆளுந் தரப்பு தோற்கடித்தால் அது கூட்டணி ஒற்றுமையை வெளிப்படுத்துவதாக அமையும்.

அரசுமீது மக்கள் தற்போது அதிருப்தியில் உள்ளனர். எனவே, இரண்டாவது தேர்வையே பஸில் தரப்பும் விரும்பும் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.



# வவுனியாவில் ஆர்வமாக தடுப்பூசி பெற்றனர் மக்கள்

வவுனியா, ஜூலை 08

வவுனியாவில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இராணுவத்தின் ஏற்பாட்டில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா காமினி மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற தடுப்பூசி வழங்கும் செயற்திட்டம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை வரை இடம்பெற்றது.

இதில் அதிகளவான பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தடுப்பூசியை ஏற்றிக் கொண்டனர். முதற்கட்டமாக ஆயிரம் தடுப்பூசிகளின் முதல் டோஸ் நேற்று பொதுமக்களுக்கு செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மகேந்திரன், பிரதேச செயலாளர் நா.கமலதாசன், இராணுவ அதிகாரிகள், மருத்துவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மணமகனின் தோழனுக்கு தொற்று; 64 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 08

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரின் பதிவுத் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட 38 குடும்பங்களை சுகாதாரப் பிரிவினர் தனிமைப்படுத்தி உள்ளனர்.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள ஜே/276 கிராம சேவையாளர் பிரிவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த பதிவுத் திருமண நிகழ்வு நடைபெற்றுள்ளது.

அந்நிலையில் மணமகனின் தோழனுக்கு (மணமகளின் சகோதரன்) கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ள நிலையில் ,மணமக்கள் குடும்பத்தினர் உள்ளிட்ட 38 குடும்பங்களை சேர்ந்த 56 நபர்கள் அடையாளம் காணப்பட்டு சுகாதார பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த திருமண நிகழ்வில் கலந்து கொண்ட மணமகனுடன் கடமையாற்றும் 8 பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் .

# கிழக்கில் 50 பேருக்கு கொரோனா தொற்று

மட்டக்களப்பு, ஜூலை 08

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நேற்று முன் தினம் 50 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக கோவிட் 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தினால் நேற்றுக் காலை வெளியிடப்பட்ட நாளாந்த நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மட்டக்களப்பில் 27, திரு கோணமலையில் 11 மற்றும் அம்பாறையில் - 12 பேருக்கு நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டதாக அந்த அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# 50,000 ஸ்புட்னிக் தடுப்பூசிகள் வந்தன

கொழும்பு, ஜூலை 08

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட 50,000 ஸ்புட்னிக்-5 தடுப்பூசிகள் நேற்று இலங்கையை வந்தடைந்தன.

நேற்று நண்பகல் 12:35 மணியளவில் கமலேயா ஆராய்ச்சி நிறுவனத்தில் இருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வழியாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு தடுப்பூசிகள் எடுத்து வரப்பட்டன.

தடுப்பூசிகள் விமான நிலைய சரக்கு முனையத்தின் இறக்குமதிப் பிரிவில் குளிர் சாதனப் பெட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

# வடக்கில் மேலும் 54 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஜூலை 08

வடக்கு மாகாணத்தில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 54 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக கோவிட் 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தினால் நேற்று காலை வெளியிடப்பட்ட நாளாந்த நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - 15, கிளிநொச்சி - 05, முல்லைத்தீவு - 07, வவுனியா - 20 மற்றும் மன்னாரில் - 07 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுகாதார துறை தொழிற்சங்கங்களில் வேலை நிறுத்தம் காரணமாக கடந்த இரண்டு நாட்களாக நாடு முழுவதும் மிகக் குறைந்தளவான பி.சி.ஆர். பரிசோதனைகளே முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறான நிலையில் நாடு முழுவதும் நேற்று முன் தினம் 934 தொற்று நோயாளர்களே உறுதிப்படுத்தப்பட்டதாகவும் கோவிட் 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# டெல்டா வைரஸ் பயங்கரம் விழிப்பாகவே வாழ்வோம்!

## மக்களுக்கு கூறுகின்றது அரசு

கொழும்பு, ஜூலை 08

“கொரோனா டெல்டா திரிபு பயங்கரமானது. அது வேகமாக பரவக்கூடிய அபாயம் உள்ளது. எனவே பயணத் தடை தளர்த்தப்பட்டாலும் சுகாதார நடைமுறைகளையும், வழிகாட்டல்களையும் முறையாக பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன், ‘டெல்டா’ பரவல் தொடர்பில் எந்தவொரு தகவலையும் அரசு மறைக்கவில்லை.” என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது ‘டெல்டா’ திரிபு பரவல் தொடர்பான தகவல்கள் மூடிமறைக்கப்படுகின்றன என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

அவ்வாறு எந்தவொரு தகவலையும் நாம் மறைக்க வில்லை. அனைத்து விடயங்களும் பொறுப்புடன் வெளியிடப்பட்டுவருகின்றது. இது தொடர்பான விடயப் பொறுப்பு சுகாதார அமைச்சிக்கு உரியது. அவ்வமைச்சின் பேச்சாளர்களும், விசேட வைத்தியர்களும் மக்களுக்கு தகவல்களை வழங்கிவருகின்றனர்.

தற்போது சமூகவலைத் தளங்கள் உள்ளன. நாட்டில் பலமான ஊடகக் கட்டமைப்பு உள்ளது. எனவே, தகவல்களை மறைக்கமுடியாது என்பது உங்களுக்கும் தெரிந்திருக்கும் என நினைக்கின்றேன். அதேவேளை, டெல்டா திரிபு பயங்கரமானது, அது வேகமாக பரவக்கூடும் என வைத்திய நிபுணர்கள் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்துவருகின்றனர். எனவேதான் நாடு பகுதியளவு திறக்கப்பட்டாலும் சுகாதார நடைமுறைகளையும், வழிகாட்டல்களையும் முழுமையாக பின்பற்றுமாறு மக்களிடம் கோரிவருகின்றோம்-என்றார்.

(அ)

# ஹேமசிறி, பூஜித் மீதான விசாரணைக்கு மூவரடங்கிய நீதிபதிகள் குழு நியமனம்

கொழும்பு, ஜூலை 08

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னான்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிரான வழக்கை விசாரணை செய்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மூவரடங்கிய நீதிபதிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நாமல் பலாலே, ஆதித்யா பதபெண்டிகே, முகமது இசாதீன் ஆகிய நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



இரவிரவாக ஒருசில சிறுவர்கள் இந்தப் பாடசாலை வளவுகளில் இருந்து தப்பி ஓடி வீடு செல்ல முயற்சி செய்தார்கள். அவர்கள் தேடிப் பிடிக்கப்பட்டு மீண்டும் பாடசாலைக்கு கூட்டிவரப்பட்டு இருட்டு அறைகளில் பட்டினி போட்டு அடைக்கப்பட்டார்கள். மீண்டும் வீட்டுக்கு ஓடிச்சென்றால் மனித சஞ்சாரம் இல்லாத காடுகளில் தனியே விடப்படுவீர்கள் என எச்சரிக்கப்பட்டார்கள்.

# பள்ளிக்குப்போன பிள்ளை ஏன் வீடு திரும்பவில்லை?

பேராசிரியர்
அமுது ஜோசப் சந்திரகாந்தன்

கடந்த மாதத்தின் முதல் நாள் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தில் காம்லூப்ஸ் என்ற நகரிலுள்ள வதிவுப் பாடசாலை வளவினுள் கனடிய பூர்வீக பெருங்குடியைச் சார்ந்த 215 சிறுவர்களின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்ட அவலச்செய்தியை கேட்டபோது, 1992 இல் யாழ்ப்பாணம் திருநெல்வேலி, இராசபாதை வீதியில், சிறுவர்கள் காப்பக நிலயத்தின் முன்பாக இலங்கை அரசின் விமானக் குண்டு வீச்சு காலை 8:00 மணியளவில் காவுகொண்ட இருபதுக்கும் மேற்பட்ட பள்ளிச்சிறார்களின் நினைவுகள் என மனக்கண்களை வருடத்தொடங்கின.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்பித்த அக்காலத்தில் நான் வாழ்ந்த ஆடியபாதம் வீதியிலிருந்த வீட்டிலிருந்து 200 யார் அளவு தூரத்தில் இந்தக்கொடுந்துயரம் இடம்பெற்றது. இது நடந்து பத்து நிமிடத்தில் நான் அங்கு சென்று நேரில் கண்டவை வார்த்தைகளுள் அடங்காதவை. கொடூரங்களை நேரில் பார்த்தவர்கள் அதனை மறந்து வாழ்வதென்பது அந்தக்கொடுநிகழ்வை நியாயப்படுத்துவதாகிவிடும். எனவே, பல சர்வதேச அரங்குகளில்நான் பலமுறை இது பற்றிப் பேசினேன் - எழுதினேன்.

வாழவேண்டிய சிறார்களின் வாழ்வு மலராத மொட்டாக இளவயதில் சிதைத்து அழிக்கப்படும் போது எமது மானிடத்தின் இருத்தல் பற்றிய பல கேள்விகள் எம் உணர்வுகளையும் விரக்தியான கையறு நிலைகளையும் ஆழ்ந்த வேதனையில் மூழ்கடிக்கின்றன. ஈழம் முதல் சிரியா வரையான போர்களில் இறந்த சிறுவர்கள் எண்ணிலடங்கா! வன்முறைகளால், வறுமையால், பசி பட்டினியால் பெற்றோரின் உதாசீனங்களால் உலகின் ஒவ்வொரு மூலையிலும் எந்நாளும் சிறுவர்கள் இறந்த வண்ணமே உள்ளனர். காம்லூப்ஸ் எலும்புக்கூடுகள் இந்தக் கொடுமைகளின் இன்னொரு பெரிய அத்தியாயம்.

பிரிட்டிஸ் கொலம்பியாவின் தென்-மைய பகுதியிலமைந்துள்ள தொம்சன் நதியின் இரு கிளைகள் இந்த நகரின் சந்திப்பதனால் கிழக்கேயுள்ள காம்லூப்ஸ் வாவிக்குள் இணைந்து கொள்வதானால் க்க்ஷ்சுவப் எனும் மொழி பேசும் ஆதிக் கனடிய குடிகள் தமது சுயமொழியில் இக்குடியிருப்பை தீகேம்லுப்ஸ் அதாவது “நீர்களின் சங்கமம்” என பெயரிட்டு அழைத்தனர். காம்லூப்ஸ் என்பது அதன் ஆங்கில ஒலிபெயர்ப்பாகும். அங்கு விலங்குகளின் மென்பஞ்சுமயிர் (fur) வியாபபரத்தில் ஈடுபட்ட பிரெஞ்சுக்காரர்களை ஓநாய்கள் கூட்டமாகத் தாக்கியதால் ஓநாய்களின் முகாம் என்ற பெயர் தோன்றியதென்றும் கூறுவார் உண்டு. ஆனால், இந்த பிரெஞ்சுப் பதம் வெறும் தற்செயலான ஒலியொற்றுமையேயாகும்.

1862 இல் அங்கு மிகவேகமாகப் பரவிய சின்னம்மை நோய் இந்தக் குடியிருப்பை அடியோடு அழித்தது. முப்பது விகிதமான மக்களே தப்பினார்கள் என ஒரு பத்திரிகை அக்டோபர் 1868 இல் குறிபிட்டுள்ளது.

சென்ற நூற்றாண்டிலும் அதற்கு முன்னராகவும் கனடாவில் 139 வதிவிடப் பள்ளிகள் அமைக்கப்பட்டன. இப்பள்ளிகளில் 4 முதல் 16 வயதுக்குட்பட்ட பூர்வீக கனடிய குடிகளிடமிருடந்து பலவந்தமாக அள்ளிச்செல்லப்பட்ட சிறுவர்களும் சிறுமிகளுமாக 150,000 சிறார்கள் பயிற்றுவிக்கப்பட்டனர் என ஒரு மதிப்பீடு உள்ளது.

ஜோன் மக்டொனால்ட் தலைமையிலான அரசுடன் இணைந்து ஐரோப்பிய அமலமரித் தியாகிகள் எனும் கத்தோலிக்க சபையினர் பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தின் காம்லூப்ஸ் வாவி நகரில் கனடிய பழங்குடிச் சிறுவர்களுக்கென பெரிய வதிவிடப் பாடசாலையை 1890 இல் நிறுவி 1969 வரை நடத்தினார்கள். 1950 களில் அங்கு வதிந்த மாணவர் தொகை ஐந்நூறு ஆகும். கனடாவில் நிறுவப்பட்ட வதிவிடப் பள்ளிகளுள் அளவில் இது மிகவும் பெரியது.

பூர்வீக பழங்குடி சிறுவர்களின் குடும்ப, மத, இன, மொழி, பண்பாடு, மரபுகள் போன்றவற்றை முற்றாகவே ஐரோப்பிய சாயத்திற்கு மாற்றுவதே இந்தபள்ளியின் அடிப்படை நோக்கம். அப்பள்ளியில் பத்து வருடம் வதிந்து பல கொடுமைகளை அனுபவித்த கிளேரன் பீற்ரேஸ்க்கு இப்போது அறுபத்திநான்கு வயது. ஜூன் மாதம் மூன்றாம் திகதி அவர் வன்கூவர் சன் பத்திரிகை நிருபருடன் மனம் திறந்து பேசினார். அந்தப் பள்ளியில் அவரும் அவரது உடன் பிறந்த சகோதரர் மூவரும் அனுபவித்த கொடுமைகள் பற்றிய அவரின் வாக்குமூலங்கள் மெய்சிலிர்ப்பவை. அந்த பள்ளிக்குச் சென்ற முதல் நாளிலேயே சிறுவர்களின் தலைமுடி மொட்டையாக மழிக்கப்பட்டது.

சகோதரங்கள் பிரிக்கப்பட்டு, தொடர்பு மறுக்கப்பட்டு வெவ்வேறு கட்டிடங்களில் தங்க வைக்கப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரியான உடைகள் வழங்கப்பட்டு, அவர்களின் பெயர்களுக்குப் பதிலாக வேறுவேறு எண்கள் கொடுக்கப்பட்டன. நாளாந்த உணவாக கூழ் போன்ற கஞ்சி வழங்கப்பட்டது. சனிக்கிழமைகளில் மட்டும் சோளம் தரப்பட்டது. பெரிய துண்டுகளாக வெட்டிய உறைந்த மாட்டிறைச்சி மதிய உணவாகப் பரிமாறப்பட்டது. பலரும் அதை உண்ணாமல் மெல்ல வீசி எறிந்தார்கள். இதற்கு பிரம்படியுடன் கூடிய கடும் தண்டனை தரப்பட்டது. இந்த உணவுகள் யாவுமே அந்தச் சிறுவர்கள் முன்னொருபோதும் உண்டிராதவை என்று அவர் குறிப்பிட்டார்.

இரவிரவாக ஒருசில சிறுவர்கள் இந்தப் பாடசாலை வளவுகளில் இருந்து தப்பி ஓடி வீடு செல்ல முயற்சி செய்தார்கள். அவர்கள் தேடிப் பிடிக்கப்பட்டு மீண்டும் பாடசாலைக்கு கூட்டிவரப்பட்டு இருட்டு அறைகளில் பட்டினி போட்டு அடைக்கப்பட்டார்கள். மீண்டும் வீட்டுக்கு ஓடிச் சென்றால் மனித சஞ்சாரம் இல்லாத காடுகளில்தனியே விடப்படுவீர்கள்என எச்சரிக்கப்பட்டார்கள். தப்பியோடவேண்டும் என்ற எண்ணம் பலமுறை தன் மனதில் தோன்றியதனாலும், தண்டனைப் பீதியினால் தான் தப்பிக்க முயலவில்லை என்றார்.

பாடசாலையின் பெருவளவில் சற்றுத் தூரமாக அப்பிள் மரத்தோட்டம் ஒன்று இருந்தது, மாணவர்கள் அந்தப் பக்கம் செல்லக் கூடாதென தடையும் விதிக்கப்பட்டிருந்தது. இந்த தோட்டம் பற்றி ஏக்கத்தோடு அவர் கூறியவை பயங்கரமான செய்திகள்.

“சில மாணவர்கள் திடீரென்று பல நாட்களுக்கு காணாமல் போனால் அவர்கள் அதிர்ஷ்டசாலிகள், வீட்டிற்கு தப்பிச் சென்று விட்டார்கள் என்றுதான் நான் முதலில் நம்பினேன். பின்புதான் அவர்கள் இறந்து அந்த அப்பிள் தோட்டத்தில் புதைக்கப்பட்டதை அறிந்து மனம் நொந்தேன்.”

மூன்று வயதான குழந்தைகளின் எலும்புக் கூடுகளும் நிலஊடுருவி ரேடார்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டன என காம்லூப்ஸ் குலமுதல்வர் வன்கூவர் சன் பத்திரிகை நிருபரின் பேட்டியின்போது குறிப்பிட்டார்.

இந்தக் “கிறிஸ்தவப் பணி” யின் போது உணவு ஒவ்வாமையினாலும், பசியினாலும், நோயினாலும் வேறு பல துன்புறுத்தல்களினாலும் இறந்த சிறுவர்கள் ஒரு பகுதியினரின் எலும்புகளே இவ்வருடம் ஜூன் மாதம் முதல் வாரத்தில் அங்கு கண்டுபிடிக்கப்பட்டன. இது கனடிய கிறிஸ்தவப் பணி வரலாற்றின் ஓர் இருண்ட பகுதி. இதனை மறைப்பணி, திருப்பணி என அடைமொழிகளால் அலங்கரித்தல் திருஅவையின் நல்ல பணிகளை நாசம் செய்துவிடும்.

இப்பாடசாலைகளில் சிறுவர்களின் வாழ்வும் வருங்காலமும் சிதைக்கப்பட்டது. பெற்றவர்கள் சகோதரங்களிடமிருந்தும் தமது பூர்வீக, பண்பாட்டு, மொழி, உணவு, மரபு, இனக்குழும உறவாடல்கள் யாவிலுமிருந்தும் இவர்கள் பிரிக்கப்பட்டார்கள்.

கடுங்கார இரசாயன பொருள்கள் கலந்த சவர்க்காரம் கொடுத்து குழந்தைகள் குளிக்கும்போது அவர்களின் தோலை வெளிறி வெண்மையாகும் வரை இறுக்கித் தேய்க்கும்படி அவர்களுக்கு கட்டளை இடப்பட்டதெனவும் கிளேரன் பீற்ரேஸ் தெரிவித்தார். இந்த சவர்க்காரம் உடலில் தேய்க்கும்போது தோல் நெருப்பாக எரியும். ஆனால், அவர்கள் கூறியபடி செய்யாவிட்டால் அடித்துத் துன்புறுத்துவார்கள். மேலும் நோயுற்ற குழந்தைகளுக்கு எவ்வித மருந்தும் தரப்படவில்லை. அவர்கள் தனித்து இருட்டு அறைகளில் விடப்பட்டனர். சிலர் பின்பு இறந்து போயினர் என்று கவலை கலந்த வேதனையுடன் அவர் பழைய பல நினைவுகளை அசைபோட்டார்.

நாங்கள் நடக்கும்போது கூட நிலம் பார்த்துக் குனிந்தபடியே நடக்க வேண்டும். நிமிர்ந்து பார்த்தால் அது குற்றம் என எமக்குத் தண்டனை கிடைக்கும் என்று அடுக்கடுக்காக அவர் பல துயர நினைவுகளை இன்றுவரை தனது அடிமனதில் சுமப்பதாகக் கூறியுள்ளார்.

இனத்துவேசமும் ஆங்கிலோ-சாக்ஸவன் வெள்ளை இனத்தலைவர்களின் மேலாதிக்கப் போக்கும் இதற்கு பல வழிகளிலும் வகைகளிலும் தூபமிட்டன. வதிவிடப் பள்ளிகளில் 3,200 வரையான சிறார்களே இறந்தார்கள் என்று உண்மைக்கும் ஒப்புரவுக்குமான ஆணைக்குழு முன்பு உறுதிப்படுத்தியது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# 96 நாடுகளில் பரவியுள்ள டெல்டா இலங்கையின் நிலைமை என்ன?



உலக சுகாதார அமைப்பால் வெளியிடப்பட்ட கோவிட் -19 சமீபத்திய நிலைமை அறிக்கையின் படி விகாரமடைந்த டெல்டா 96 நாடுகளில் பதிவாகியுள்ளமை தெரிய வந்துள்ளது.

சில நாடுகளில் மரபணு பரிசோதனைகளை மேற்கொள்ள வசதிகள் இல்லாததால் விகாரமடைந்த வைரஸ்களின் பரவல் குறித்த துல்லியமான தகவல்கள் கிடைக்காமல் போகலாம் என்று அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. எனவே விகாரமடைந்த டெல்டா அறிக்கையிடப்பட்ட இடங்களை விட அதிகமான இடங்களில் பரவியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

விகாரமடைந்த டெல்டா கண்டுபிடிக்கப்பட்ட நாடுகளில், எட்டு வாரங்களுக்குள் கோவிட்-19 இன் முன்னைய விகாரமடைந்த வைரஸ்களை விட டெல்டா முன்னணி வகிக்கின்றது. எனவே, உலகெங்கிலும் விகாரமடைந்த டெல்டா பரவலில் ஒற்றுமையை எதிர்பார்க்கலாம். அடுத்த சில மாதங்களுக்குள், விகாரமடைந்த டெல்டா உலகின் மிகவும் பிரபலமான கோவிட்-19 வைரஸின் திரிபாக மாறும் என்று அறிக்கை மேலும் கணித்துள்ளது.

இந்த சூழ்நிலையில் இலங்கையிலும் விகாரமடைந்த டெல்டா குறைந்த விகிதத்தில் பரவியுள்ளமையை அவதானிக்கலாம்.

அறிக்கைகளின் படி, விகாரமடைந்த டெல்டா பற்றிய அச்சந்தருகின்ற உண்மை என்னவென்றால், இது முன்னைய விகாரமடைந்த வைரஸ்களைவிட 55% வேகமாக பரவுவதோடு மற்றும் கோவிட்-19க்கு எதிராக தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் இடத்தில் பெரும் பிரச்னையை ஏற்படுத்தும்.

எனவே, இலங்கையர்களாகிய நாங்கள் இந்த சவாலான காலகட்டத்தில் நாடு முழுவதும் பரவும் கோவிட்-19இன் விகாரமடைந்த வைரஸ் பரவலினை குறைப்பதற்காக சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். மேலும் கோவிட்-19க்கு எதிராக தடுப்பூசி பெற்றுக் கொள்ள நீங்கள் தகுதி பெற்றிருந்தால் அதை உடனடியாக பெற்றுக் கொள்வதன் மூலம் விகாரமடைந்த டெல்டா பரவலினை குறைக்க முடியும்.

வீட்டிலிருந்து வெளியேறும் போதும் மற்றும் வீட்டிற்கு திரும்பி வரும் போதும் அறிவுறுத்தப்பட்ட சுகாதார பழக்கவழக்கங்களை கடைப் பிடிக்க தவறினால் விகாரமடைந்த வைரஸ் வீட்டிற்குள் உள் நுழையலாம் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

விகாரமடைந்த டெல்டா உங்கள் அன்புக்குரியவர்களான பெற்றோர் மற்றும் குழந்தைகளிடத்தில் பரவக்கூடிய ஆபத்து அதிகமாகும். எனவே சுகாதார பழக்கவழக்கங்களை கண்டிப்பாக கடைப்பிடிப்பதனால் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் கோவிட்-19 இலிருந்து பாதுகாத்து கொள்ளலாம் என்பதை அவசியமாக நினைவில் வைத்திருக்க வேண்டும்.

எனவே, இந் நிலைமை மோசமடைவதை தவிர்க்க வேண்டுமாயின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை நாம் தீவிரமாக கடைப்பிடிப்பது மிக அவசியமாகும்.

1. அதிக சன நெரிசல் மிக்க இடங்களைத் தவிர்த்தல்

2. காற்றோட்டமற்ற விதத்தில் ஜன்னல் மற்றும் கதவுகள் மூடப்பட்டுள்ள இடங்களைத் தவிர்த்தல்

3. நபர்கள் நெருக்கமாக இருக்க வேண்டிய கட்டாயமுள்ள இடங்களில், அவ்வாபத்து அதிகம் இருப்பதால் அவ்விடங்களைத் தவிர்த்தல்.

பயணக்கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப்படும் பட்சத்தில் மேற்குறிப்பிட்ட நோய்த்தவிர்ப்பு நடவடிக்கைகளை மிகச்சரியாக கடைபிடிப்படிப்பதன் மூலம் உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு கோவிட்-19 மற்றும் விகாரமடைந்த டெல்டா வைரஸ் மூலம் ஆபத்து ஏற்படுவதை நீங்கள் கணிசமாக குறைக்க முடியும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

**சுகாதார மேம்பாட்டு பணியகம்.**

> **“ விகாரமடைந்த டெல்டா கண்டுபிடிக்கப்பட்ட நாடுகளில், எட்டு வாரங்களுக்குள் கோவிட்-19இன் முன்னைய விகாரமடைந்த வைரஸ்களைவிட டெல்டா முன்னணி வகிக்கின்றது. எனவே, உலகெங்கிலும் டெல்டா பரவலில் ஒற்றுமையை எதிர்பார்க்கலாம். அடுத்த சில மாதங்களுக்குள், விகாரமடைந்த டெல்டா உலகின் மிகவும் பிரபலமான கோவிட்-19 வைரஸின் திரிபாக மாறும் என்று அறிக்கை மேலும் கணித்துள்ளது. ”**

---

# பள்ளிக்குப்போன பிள்ளை...

**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஆனால், காம்லூப்ஸ் கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து இந்த எண்ணிக்கை 25,000க்கும் மேல் என்ற கருத்து தற்போது நிலவுகின்றது. காம்லூப்ஸ் போன்று பல வதிவிடப் பள்ளிகளில் இத்தகைய கோரங்கள் இடம்பெற்றன. இவை வெளிச்சத்திற்கு வரும்போது அதை தாங்குவதற்கு எம்மை தயார்படுத்த வேண்டும் என முன்னாள் செனட்டர் மாறே சின்கிளேயர் ஆலோசனை கூறியுள்ளார்.

வதிவிடப் பள்ளிகள் சார்ந்த புதைகுழிகள் பாதுகாக்கப்படவேண்டும் என பல பக்கங்களிலுமிருந்து வேண்டுகோள் விடுக்கப்படுள்ளது. தேசிய தரநிலைகள் கொண்ட விசாரணை ஆணைக்குழுக்கள் இவற்றை பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை பூர்வீகக் குடிமக்களிடமிருந்தும் மனித உரிமைக் குழுக்கள் பலவற்றிடமிருந்தும் விடுக்கப்பட்டுள்ளன.

இந்த வதிவிடப் படசாலைகளில் 47 வீதமானவை அமலமரித் தியாகிகள் சபை எனும் ஐரோப்பிய கத்தோலிக்க குருக்களே நிர்வகித்தார்கள். இந்தப் படசாலைகள் சார்ந்த அனைத்துப் பதிவுகளும் பகிரங்கப் படுத்தப்பட வேண்டுமெனவும் கனடிய மத்திய அரசிடமும், பாடசாலை நடத்துனர்களிடமும் கேட்கப்பட்டுள்ளது. ஆயினும் அங்கு பணியாற்றியவர்களின் கல்வி, தராதரம், குடும்பப் பின்னணி, நாட் குறிப்புகள் போன்ற தனிப்பட்ட பதிவுகளை பகிரங்கப்படுத்த முடியாதென அச் சபையின் கனடிய தலைவர் அறிவித்துள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் ஈடுபாடு இதில் பெருமளவில் உள்ளதால் அதன் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் பகிரங்க மன்னிப்பு கேட்கவேண்டும் என்ற கனடிய அரசினதும் மக்களினதும் கோரிக்கை வீரியம் பெற்று ஓங்கி வருகின்றது. முன்னைய பாப்பரசர்களுடன் ஒப்பிடும்போது இதனைத் திருத்தந்தை பிரான்சிஸ் ஒருவரால் மட்டுமே நேரிய முறையில் செய்யமுடியும் என்ற நம்பிக்கையும் மக்கள் மத்தியில் பரவலாக உண்டு.

இறந்த சிறார்கள் பற்றிய அவல மான பல உண்மைகளைக் கனடிய கத்தோ லிக்க தலைமை எப்படித்தான் பூசி மெழுகி மூடி மறைத்தாலும், இயேசு கிறிஸ்துவே தலை - திருச்சபையே அதன் உடல் என நம்பி வாழும் கனடிய கிறிஸ்தவ சமூகத்தில் இந்தச் சிறார்களின் கொடூர மரணங்கள் விட்டுச்செல்லும் காயங்களும் வடுக்களும் நித்தியமாக நின்று நிலைக்கும் என்பதே பேருண்மை.

**கட்டுரையாளர்:**
**ரொறன்ரோ பல்கலைக்கழகம், கனடா**
**நன்றி: தமிழர் தகவல், கனடா.**

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள் I


நேரம் - 45 நிமிடம்

1) C 2) E 3) F



24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27.  உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ


❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.



34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்


35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்




36.  இவ்வுருவில் $\frac{5}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டங்கள் எது?
1) 2) 3) 

38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?

1) 2) 3)

39. 
3 * 4 # 3 = 15 இங்கு * # ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?
1) x , + 2) + , x 3) x , -

40. 

1)  2)  3) 



## கருணாரத்ன, வித்தியாரத்ன உள்ளிட்ட 5 பேர் நேற்று கைது

கொழும்பு, ஜூலை 08

அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் ஊவா மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன உள்ளிட்ட ஐவரை போகஹகும்புர பொலிஸார் நேற்றுக் காலை கைதுசெய்துள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பண்டாரவளை - பொரலந்தை பிரதேசத்தில் கடந்த முதலாம் திகதி இவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதையடுத்து வெலிமடை நீதிமன்றத்தின் அனுமதியுடன் இவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில், இவர்கள் போகஹகும்புர பொலிஸ் நிலையத்தில் நேற்று ஆஜரானதையடுத்தே குறித்த ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (இ)

# காணாமல்போனோருக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு இல்லை

### சபையில் கஜேந்திரகுமார் எம்.பி.



**கொழும்பு, ஜூலை 08**

**"தமிழ் மக்கள் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டோருக்குத் தீர்வு கிடைக்கும் என எமது மக்களுக்கு நம்பிக்கை இல்லை."- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

"இறுதிப் போரில் தமிழ் மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டனர். குற்றம் இடம்பெற்றதை உறுதிப்படுத்தும் நிலைமை இருந்தும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க முடியாது 12 ஆண்டுகள் கடந்துள்ளது. இது இனியும் தொடர்ந்தால் குற்றவாளிகள் ஒருபோதும் தண்டிக்கப்பட மாட்டார்கள்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்த) சட்ட மூலம், சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கெதிரான சமவாயம் (திருத்தம்) சட்ட மூலத்தில் திருத்தங்களை செய்ய எடுக்கும் முயற்சியை நான் வரவேற்கின்றேன்.

அதேபோல் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான காரியாலயத்தை பொறுத்தவரை இந்தப் பிரேரணை வந்தபோது தற்போதைய அரசு மிக மோசமாக விமர்சித்தது.

இந்தப் பிரேரணையை அரசு நிராகரிப்பதாக கூறினர். முன்னைய அரசும் பொறுப்புக்கூறல் விடயத்தில் இருந்து விடுபட இதனைப் பயன்படுத்திக் கொண்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான காரியாலயம் மிகவும் முக்கியமானதாகும். இதில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆனால், பாதிக்கப்பட்ட தரப்பின் பக்கம் இருந்து இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. இறுதியாக அவர்கள் வாக்குமூலம் கொடுப்பதை நிராகரிக்கும் நிலைமை உருவாகியது.

அதேபோல், இராணுவத்தைத் தண்டிக்க இடமளிக்க மாட்டோம் என சிங்கள அரசியல்வாதிகள் கூறிக்கொண்டிருந்தனர். அவ்வாறு இருந்தால் எவ்வாறு நியாயம் பெற்றுக் கொடுக்கப்படும்?

தமிழ் மக்கள் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டோருக்குத் தீர்வு கிடைக்கும் என எமது மக்களுக்கு நம்பிக்கை இல்லை" - என்றார். (இ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 322 பேர் கைது

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 322 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறியக் குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 48 ஆயிரத்து 244ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவர்களில் 41 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

## '20'ஐ ஆதரித்த அரவிந்குமார் கம்மன்பிலவை எதிர்ப்பாரா?

கொழும்பு, ஜூலை 08

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவளித்த பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்குமார், வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எத்தகைய முடிவை எடுப்பார் என்ற கேள்வி அரசியல் களத்தில் எழுந்துள்ளது.

20 ஐ ஆதரித்திருந்தாலும் ஆளுங்கட்சியில் இணைவது தொடர்பான அறிவிப்பை அரவிந்குமார் எம்.பி. இன்னும் வெளியிடவில்லை. ஆளுந்தரப்பில் இருந்து அவருக்குப் பதவிகள் எதுவும் வழங்கப்படவும் இல்லை. எதிர்காலத்தில் வழங்கப்படுமா என்பது பற்றியும் எதுவும் அறிவிக்கப்படவும் இல்லை.

எனவே, எதிரணியில் இருந்து 20 இற்காக அரசுக்கு ஆதரவு வழங்கியதுபோல், நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போதும் அரவிந்குமார் எம்.பி. உதயகம்மன்பிலவை ஆதரித்து பிரேரணைக்கு



எதிராக வாக்களிக்கக்கூடும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக வாக்கெடுப்பில் அவர் பங்கேற்காமல் இருந்தால் கூட, பிரேரணையை ஆதரித்து வாக்களிக்கும் நிலைப்பாட்டை எடுக்கவேமாட்டார் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேவேளை, இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்படாததாலும், மக்களின் பக்கம் நின்றும் பிரேரணைக்கு அரவிந்குமார் எம்.பி. ஆதரவு வழங்கக்கூடும் எனவும் அவருக்கு நெருக்கமான சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ)

# வெள்ளை வான் இப்போது இல்லை; ஆனால் வீட்டுக்குள் புகுந்து தாக்குதல்

### சபையில் அரசுக்கு எதிராக தலதா உரை

கொழும்பு, ஜூலை 08

"இப்போது வெள்ளை வானில் வந்து கடத்தும் சம்பவங்கள் இடம்பெறுவதில்லை என்பது உண்மைதான். ஆனால், தற்போதைய அரசில் வீட்டுக்கு நேரடியாகவே வந்து அடித்து, இழுத்துத் தூக்கிச் செல்லும் சம்பவங்களே நடக்கின்றன."

- இவ்வாறு முன்னாள் நீதி அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துகோரல தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"பிரபாகரனை சுட்டுக்கொன்று நாயை இழுத்து வந்ததுபோல் மீண்டும் செயல்பட என்னால் முடியுமென ஜனாதிபதி ஒரு கூட்டத்தில் பகிரங்க மிரட்டல் விடுத்தார். இப்போது பிரபாகரனுக்கு நடந்ததுபோல்தான் நடக்குமென மேல் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஊடகவியலாளர் ஒருவரைப் பகிரங்கமாக மிரட்டுகின்றார்.

இவர்களின் கடந்த ஆட்சியில் கொலை மிரட்டல்களினால் பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். அவ்வாறானதொரு நிலைமை மீண்டும் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்படுகின்றது.

இப்போது வெள்ளை வானில்



வந்து கடத்தும் சம்பவங்கள் இடம்பெறுவதில்லை என்று கூறுகின்றனர். அது உண்மைதான். ஆனால், தற்போதைய அரசில் வீட்டுக்கு நேரடியாகவே வந்து அடித்து, இழுத்துத் தூக்கிச் செல்லும் சம்பவங்களே நடக்கின்றன" - என்றார். (இ)

# தனிமைப்படுத்தப்பட்டிருந்த இரு பிரதேசங்கள் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 08

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்பட்டதையடுத்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த இரண்டு பிரதேசங்கள் நேற்றுக் காலை 6 மணிமுதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை கொரோனாப் பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டன்சினன் கிராமசேவகர் பிரிவில் மத்திய பகுதி விடுவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகராஜா வலவ்வ பிரதேசம் விடுவிக்கப்பட்டுள்ளது. (இ)

# 'ஓன்லைன்' மூலம் பெண்களை விற்கும் மேலும் 4 இணையதளங்கள் அடையாளம்

### பல கோணங்களில் விசாரணை தீவிரம்

கொழும்பு, ஜூலை 08

பெண்கள் மற்றும் சிறுமிகளை பாலியல் நடவடிக்கைகளுக்காக 'ஒன்லைன்' மூலம் விற்பனை செய்யும் மேலும் நான்கு இணையதளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில், இது தொடர்பிலும், இவற்றின் பின்புலம் தொடர்பிலும் பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்கிஸையில் 15 வயது சிறுமி ஒருவர் பாலியல் நடவடிக்கைகளுக்காக இணையம் மூலம் விற்பனை செய்யப்பட்ட சம்பவமானது இலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதனுடன் முக்கிய நபர்கள் சிலர் தொடர்புபட்டுள்ளமை கைதுகள் மூலம் தெரியவந்துள்ளது. எனவே, இச்சம்பவம் தொடர்பில் இன்னும் விசாரணைகள் தொடர்கின்றன.

இதன் அடிப்படையிலேயே மேலும் நான்கு இணையதளங்கள் கண்டறியப்பட்டுள்ளன. (இ)

# எப்சிலன், லாம்ப்டா புதிய வைரஸ்கள் ஐரோப்பிய நாடுகளில் பரவுகின்றன!

லண்டன், ஜூலை 08

தென்னமெரிக்க நாடான பெருவில் கடந்த ஆண்டு முதன்முதலில் கண்டறியப் பட்ட மரபு மாறிய வைரஸ் ஐரோப்பா உட்பட 27 நாடு களில் பரவியுள்ளது.

உலக சுகாதார அமைப்பால் கிரேக்க இலக்கப் பெயரில் 'லாம்ப்டா' (Lambda) என அழைக்கப்படுகின்ற அந்தத் திரிபு தென் அமெரிக்க நாடு களில் தீவிரமாகப் பரவியிருந் தது. பெரு நாட்டில் சுமார் எண்பது வீதமான தொற்றுக்க ளுக்கு அது காரணமாக விளங்கியது. தற்சமயம் அங்கி ருந்து அது உலகின் ஏனைய பகுதிகளுக்குப் பரவத் தொடங்கியுள்ளது.

இதன் மரபு மாற்றம் அறி வியலாளர்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. புழக்கத்தில் உள்ள தடுப்பூசிகளையும் மனி தரின் இயல்பான நோய் எதிர்ப்பு சக்தியையும் எதிர்த்து நிற்கவல் லது என்பதை ஆரம்ப ஆய்வு கள் வெளிப்படுத்தியுள்ளன.

இங்கிலாந்தில் ஏற்கனவே 'லாம்ப்டா' தொற்றாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ள னர். ஜேர்மனியிலும் அது பரவியிருப்பது தெரிய வந்துள் ளது.

இதேபோன்று அமெரிக்கா வின் கலிபோர்னியாவில் கடந்த ஆண்டு முதலில் கண்ட றியப்பட்டு 'கலிபோர்னிய திரிபு' என்று அழைக்கப்பட்ட வைரஸும் ஐரோப்பிய நாடு களில் பரவுவது தெரியவந்திருக் கிறது.

கலிபோர்னியா வைரஸுக்கு 'எப்சிலன்' (Epsilon) என்று பெய ரிடப்பட்டிருக்கிறது. ஏற்க னவே, இந்தியாவின் 'டெல்டா' வைரஸ் காரணமாக புதிய சவால்களைச் சந்தித்துள்ள ஐரோப்பிய நாடுகளை எப்சிலன், லாம்ப்டா ஆகிய இரு திரிபு களின் வருகை மேலும் குழப் பத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது.

உலக சுகாதார நிறுவனம் இந்த இரண்டு திரிபுகளையும் 'கவனத்துக்குரியவை' என்று அறிவித்திருக்கிறது. அவை தொடர்பான ஆய்வுகளுக்கு மேலும் கால அவகாசம் தேவையாக உள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது. (ஐ)



# கனடாவின் ஆளுநர் நாயகமாக பழங்குடி இனத்தவர் நியமனம்!

ரொறன்ரோ, ஜூலை 08

கனடாவில் மிக முக்கிய பதவிகளில் ஒன்றான ஆளுநர் நாயகம் பதவிக்கு பழங்குடி சமூகத்தவரான மேரி சைமன் பெயர் முன்மொழியப்பட்டுள் ளது.

கனடாவின் 30ஆவது ஆளு நர் நாயகமாக மேரி சைமன் பிரேரிக்கப்பட்டமையை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ செவ்வாய்க்கிழமை அறிவித் தார். இதன்மூலம் கனடா வரலாற்றில் ஆளுநர் நாயகம் என்ற உயரிய பதவி நிலைக்கு நியமிக்கப்படும் முதல் பழங் குடி சமூகத்தைச் சேர்ந்தவராக மேரி சைமன் சாதனை படைத் துள்ளார்.

"இது ஒரு வரலாற்றுத் தருணம். கனடா சுதந்திர நாடாக உருவான 154 ஆண்டு கால வரலாற்றில் பழங்குடி சமூகத்தவர் ஒருவர் ஆளுநர் நாயகமாக நியமிக்கப்படுகி றார். கனடா தொடர்ந்து முன் னேற ஆளுநர் நாயகம் மேரி சைமனின் பணி உதவும். நாங் கள் அவருடன் இணைந்து அதற்கு வலுச் சேர்ப்போம்", என பிரதமர் ட்ரூடோ கூறினார்.

பிரதமர் ட்ரூடோவின் பரிந்துரையின் பேரில் இரண் டாம் எலிசபெத் மகாராணி இந்த நியமனத்திற்கு ஒப்புதல் அளித்தார். இதையடுத்து அவர் விரைவில் தமது பத வியை பொறுப்பேற்பார்.

கனடாவில் முன்னாள் பழங்குடியின பள்ளிகளில் அடையாளப்படுத்தப்படாத பல நூற்றுக்கணக்கான சிறுவர் களின் எச்சங்கள் கண்டறியப் பட்ட சர்ச்சைகளுக்கு மத்தி யில் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் நாட்டில் மிக முக்கிய பதவிநிலைக்கு நியமிக் கப்பட்டுள்ளார்.

"கடந்த காலத்தில் நடந்த தவறுகளைத் திருத்திக்கொண்டு நம்பிக்கையான எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்று நான் நம்புகிறேன்", என்று ஆளுநர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள மேரி சைமன் தெரிவித்தார்.

கனடாவின் ஆளுநர் நாய கம் பதவி என்பது மன்னரின் துணைப் பிரதிநிதி என்பதா கும். இதன்படி, பிரிட்டனின் இரண்டாம் எலிசபெத் மகா ராணியின் பிரதிநிதியாக மேரி சைமன் செயல்படுவார். அரச மைப்பு மற்றும் சம்பிரதாய கடமைகளும் ஆளுநர் நாயகத் தின் பொறுப்புகளாகும். (ஐ)

# பாப்பரசர் குணமடைந்து வருகிறார்



ரோம், ஜூலை 08

குடல் சத்திர சிகிச்சைக்கு பின்னர் பரிசுத்த பாப்பரசர் உடல்நலன் தேறி வருகிறார் என்று வத்திக்கான் செய்தி தொடர்பாளர் மத்தியூ புருனி தெரிவித்துள்ளார்.

பரிசுத்த பாப்பரசர் பிரான் சிஸ் குடல் பிரச்னையால் அவ திப்பட்டு வந்தார். இந்த நிலை யில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ரோம் ஜெமெல்லி மருத்துவமனையில் அவருக்கு சத்திர சிகிச்சை இடம்பெற் றது. இது சுமார் 3 மணி நேரம் நீடித்ததாகத் தெரிய வந்தது.

இந்தநிலையில், வத்திக் கான் செய்தி தொடர்பாளர் நேற்று விடுத்த அறிக்கையில், "பாப்பரசர் இரவு நன்றாக ஓய்வு எடுத்தார். இன்று காலை உணவு உண்டார். பத்திரிகை களை படித்தார். நடைப் பயிற்சியும் செய்தார்" என்று கூறியுள்ளார்.

இந்த வாரம் முழுவதும் பாப்பரசர் மருத்துவமனையி லேயே சிகிச்சை பெறுவார் என்றும் தெரியவருகின்றது.



# ஆங்சான் சூகி தடுப்பூசி பெற்றார்!

## நாட்டில் 2.8 வீதமானோருக்கே தடுப்பூசி

யங்கூன், ஜூலை 08

மியன்மாரின் ஆட்சியிலி ருந்து அகற்றப்பட்ட முன்னாள் தலைவர் ஆங்சான் சூகிக்கு தடுப்பூசி போடப்பட்டதாக அவரின் வழக்கறிஞர் உறுதிப் படுத்தினார்.

நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்பட்ட பின்னர் அங்கு நிலை மைகள் மோசமாகவுள்ளன. ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்த சுகாதார ஊழியர்கள் வெளி யேறியுள்ளனர்.

5 கோடியே 40 இலட்சம் மக்கள் தொகைக் கொண்ட அந்த நாட்டில் 2.8 சதவீதமா னவர்களுக்கு மட்டுமே தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

76 வயதான ஆங்சான் சூகி எப்போது தடுப்பூசி பெற்றார்?, அவருக்கு எந்தத் தடுப்பூசி வழங்கப்பட்டது என்ற விவரங்கள் தெளிவாகத் தெரிய வில்லை. அதிகாரத்திலிருந்து அவர் நீக்கப்பட்ட பின்னர், மிகக் குறுகிய நேரம் மட்டும் நீதிமன்றுக்கு அவர் வந்திருந் தார். அவர் தொடர்பில் வேறு எந்தத் தகவலும் வெளியாக வில்லை.

இந்த ஆண்டின் தொடக்கத் தில் இந்தியாவிடம் 15 இலட் சம் தடுப்பூசிகளையும், சீனா விடம் 5 இலட்சம் தடுப்பூசி களையும் மியன்மார் பெற்றது. அதிக தடுப்பூசிகளை பெற அந்தநாடு முயற்சிகளை செய்து வருகின்றது என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

## 28 பேருடன் மாயமான

# விமானத்தின் பாகங்கள் கடலில் கண்டுபிடிப்பு!

ரஷ்யாவின் தீபகற்ப பகுதி யான கம்சட்காவில், 28 பேரு டன் மாயமான விமானத்தின் பாகங்கள் கடலில் கண்டு பிடிக்கப்பட்டது. இதனால், அதில் பயணித்தவர்கள் அனை வரும் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

ரஷ்யாவின் பெட்ரோபவ் லோவ்ஸ்க் - கம்சாட்ச்கி நகரில் இருந்து, கம்சட்கா தீபகற்பத் தின் பாலனா நகருக்கு, 28 பேருடன் "அன்ரனோவ் அன் 26" ரகத்தைச் சேர்ந்த விமானம் பயணித்தது.

விமானத்துடனான தொடர்பு திடீரென துண்டிக் கப்பட்டது. இதையடுத்து நடத்தப்பட்ட தேடுதல் பணி கள் தொடங்கின. இதன்போது கடலின் நடுவிலுள்ள குன்று ஒன்றிலும் கடல் பரப்பிலும் விமானத்தின் பாகங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

தரையிறங்க முயன்றபோது குன்றுடன் மோதி விமானம் விபத்துக்கு உள்ளாகியிருக்க லாம். அதில் பயணித்தவர்கள் அனைவரும் இறந்திருக்கலாம் என்று விமான நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

# அமெ. தூதரகத்தை குறிவைத்து வெடிமருந்து நிரப்பிய ட்ரோன்!

## பாதுகாப்பு படையால் சுட்டுவீழ்த்தப்பட்டது

பாக்தாத், ஜூலை 08

வெடிமருந்து நிரப்பிய ட்ரோன் மூலம் அமெரிக்க தூதரகத்தில் நடத் தப்படவிருந்த தாக்குதல் முறியடிக்கப் பட்டது.

ஈராக் தலைநகர் பாக்தாத் தில் உள்ள அமெரிக்க தூதரகத் தின் மேலே வெடி மருந்து நிரப்பிய ட்ரோன் ஒன்று பறந் தது. இதையடுத்து அமெரிக்க தூதரகத் தைச் சுற்றி அமைக்கப் பட்ட வான் பாது காப்பு அமைப்பு அபாய ஒலி எழுப்பியது.

இதைத் தொடர்ந்து தூதரகத்தின் பாதுகாப்பு கடமையிலிருந்த இராணு வத்தினர் அந்த ட்ரோனை சுட்டு வீழ்த்தி னர். இதனால், நேரவிருந்த பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.


முன்னதாக ஈராக்கின் மேற்கு பகுதி யில் அமைந்துள்ள அமெரிக்க இரா ணுவ தளத்தை குறிவைத்து ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டன. எனினும் இந்த தாக்குதலால் ஏற்பட்ட சேதவிவ ரங்கள் பற்றி உடனடி தகவல்கள் இல்லை. (ஐ)

# பழம்பெரும் ஹிந்தி நடிகர் திலீப்குமார் காலமானார்!

மும்பை, ஜூலை 08

ஹிந்தி படவுலகின் (பொலிவூட்) பழம்பெரும் நடிகர் திலீப் குமார் நேற்று காலாமானார். 98 வயதான நடிகர் திலீப்குமார் மூச்சுத்திணறல் காரணமாக கடந்த மாதம் மும்பை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் நேற்று காலமானார்.

இந்திய திரையுலகின் மகத்தான நடிகர்களில் ஒருவ ரான திலீப் குமார், 1994இல் "தாதாசாகேப் பால்கே" விருதை வென்றார். பத்ம பூஷன், பத்ம விபூஷன் பட்டங்களும் அவ ருக்கு வழங்கப்பட்டுள்ளன. சிறந்த நடிகருக்கான ஃபிலிம்ஃ பேர் விருதுகளை அதிகமுறை வென்றுள்ளார். 1944,ல் நடிக ராக அறிமுகமாகி, 50 ஆண்டுகளில் 65 படங்களில் நடித்துள்ளார்.



ஈழநாடு



# யூரோ கிண்ண உதைபந்து; இறுதியாட்டத்தில் இத்தாலி!



லண்டன், ஜூலை 08

ஸ்பெயின் அணியை சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி பெற்று யூரோ கிண்ணத்தின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது இத்தாலி.

ஐரோப்பிய நாடுகள் மோதும் யூரோ கிண்ணஉதைபந்தாட்டத் தொடர் நடக்கிறது. இதில், லண்டனில் நடந்த முதலாவது அரையிறுதி போட்டியில், ஸ்பெயின், இத்தாலி அணிகள் மோதின.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் கோல் போட முயற்சி செய்தன. இதனால் ஆட்டத்தில் அனல் பறந்தது. இருப்பினும் முதல் பாதியில் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. இரண்டாவது பாதியில், 60ஆவது நிமிடத்தில், இத்தாலியின் பெடரிகோ சியசா கோல் அடித்து, தனது அணியை முன்னிலை பெற வைத்தார்.

இதையடுத்து தாக்குதல் ஆட்டம் ஆடிய, ஸ்பெயினுக்கு கைமேல் பலன் கிடைத்தது. 80ஆவது நிமிடத்தில், அல்வரோ மொராட்டா கோல் அடிக்க, 1 - 1 என போட்டி சமன் ஆனது. கூடுதல் நேரத்தின் 110வது நிமிடத்தில் இத்தாலியின் பெரார்டி கோல் அடித்த போதும், அது செல்லுபடியற்ற கோல் என அறிவிக்கப்பட, போட்டி சமநிலை தவிர்ப்பு முறைமைக்கு (பெனால்டி சூட் அவுட்) சென்றது. இதில் 3 - 2 என்ற கோல் கணக்கில் இத்தாலி வெற்றி பெற்றது.இறுதிப் போட்டி லண்டனில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடக்கவுள்ளது. (ஐ)



## விம்பிள்டன் ரென்னிஸ்

# சபலென்கா, பிலிஸ்கோவா அரையிறுதிக்கு முன்னேற்றம்!

லண்டன், ஜூலை 08

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு கரோலினா பிலிஸ்கோவா, சபலென்கா ஆகியோர் முன்னேறினர்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது. இதில், நேற்று முன்தினம் நடந்த காலிறுதி போட்டி ஒன்றில் செக் குடியரசின் கரோலினா பிலிஸ்கோவாவும் சுவிற்சர்லாந்தின் கொலுபிக்கும் மோதினர்.

முதல் செற்றை 6 - 2, 6 - 2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முதன்முறையாக முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி போட்டியில், பெலாரசின் சபலென்கா, துனிசியாவின் ஜபேயுரை சந்தித்தார். சபலென்கா 6-4, 6-3 என்ற செற்களில் வென்று கிராண்ட்ஸ்லம் போட்டிகளில் முதன்முறையாக அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

# ஸ்ரோக்ஸ் தலைமையில் இங்கிலாந்து புதிய அணி!

லண்டன், ஜூலை 08

இங்கிலாந்து வீரர்கள் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனால் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் 9 அறிமுக வீரர்கள் கொண்ட அணியை இங்கிலாந்து அறிவித்துள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி 3 ஒருநாள், இருபது - 20 தொடர்களில் விளையாட உள்ளது. இன்று தொடங்கும் இந்தத் தொடர் 13 ஆம் திகதி முடிவடைகிறது.

இந்த நிலையில், அந்த அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்ரோக்ஸ் விரலில் ஏற்பட்ட காயம் குணமடைந்து அணிக்கு திரும்பினார். இதனால் அவர் தலைமையில் கவுண்டி வீரர்களை கொண்ட புதிய அணியை நேற்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்தது.

18 பேர் கொண்ட அந்த அணியின் விவரம் வருமாறு,

பென்ஸ்ரோக்ஸ்(கட்டன்), ஜேக்போல், டேனி பிரிக்ஸ், பிரிடன் கார்ஸ், ஜாக் கிராளி, பென் டக்கெட், லூயிஸ் கிரிகோரி, ரொம்ஹெல்ம், வில்ஜேக்ஸ், டேன் லோரன்ஸ், சக்யுப் முஹமது, டேவிட் மலன், கிரெய்க் ஓவர்டன், மட்பார்கின்ஸன், டேவின் பெய்ன், பில் சால்ட், ஜான் சிம்ப்ஸன், ஜேம்ஸ் வின்ஸ். (ஐ)






# மத்தியூஸ் ஓய்வுக்கு தயாராகிறார்

கொழும்பு, ஜூலை 08

இலங்கை கிரிக்கெட் வீரர் அஞ்சலோ மத்தியூஸ், சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து ஆலோசித்து வருகிறார் என்று இலங்கை கிரிக்கெட் சபைக்கு தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த விவகாரம் குறித்து விவாதித்து வருகிறார் ரெனவும், எதிர்வரும் வாரங்களில் தனது முடிவை தெரிவிப்பதாகவும் மத்தியூஸ் இலங்கை கிரிக்கெட் சபைக்கு தெரிவித்துள்ளார் என்றும் உறுதிப்படுத்தப்பட்ட வாட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

கடந்த 2008 நவம்பர் 27 சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமான மத்தியூஸ் இறுதியாக கடந்த மார்ச் 09 மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் விளையாடினார்.

அவர், அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 13,219 ஓட்டங்களையும் 191 விக்கெட்களையும் வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோபா அமெரிக்க தொடர்: இறுதியாட்டத்தில் பிரேஸில்!

ரியோ டி ஜெனிரோ, ஜூலை 08

கோபா அமெரிக்க கிண்ண உதைபந்தாட்டத்தின் இறுதியாட்டத்துக்கு இலகுவாக நுழைந்தது பிரேஸில்.

தென்னமெரிக்க நாடுகள் மோதும் கோபா அமெரிக்க உதைபந்தாட்ட தொடர் பிரேஸிலில் நடக்கிறது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் நெய்மர் தலைமையிலான பிரேஸில் அணி பெரு அணியை சந்தித்தது. லீக் சுற்று ஆட்டத்தில் 4 - 0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வென்ற பிரேஸிலை பெரு வீரர்கள் இம்முறை தடுமாற வைத்தனர்.

35ஆவது நிமிடத்தில் நெய்மர் சகவீரரான லுகாஸூக்கு தட்டிக் கொடுத்தார். அவர் அதை கோலாக மாற்றினார்.

இந்த கோலால் 1 - 0 என்ற கணக்கில் முதல் பாதி ஆட்டத்தில் முன்னிலை பெற்றது.



இரண்டாவது பாதி ஆட்டம் அனல் தெறித்தபோதிலும் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. இறுதியில் பிரேஸில் 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

இது பிரேஸில் அணி களம் காணும் 29ஆவது கோபா அமெரிக்க தொடர் இறுதியாட்டமாகும். அந்த அணி 9 தடவைகள் கிண்ணம் வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஆப்கான் ரி - 20 அணிக்கு ரஷீத் கான் தலைமை!

காபூல், ஜூலை 08

ஆப்கானிஸ்தான் இருபது - 20 அணிக்கு புதிய தலைவராக ரஷீத் கான் நியமிக்கப்பட்டுள்ளார். நஜ்முல்லா ஜோர்தான் உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி. இருபது - 20 தரவரிசையில் பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தில் ரஷீத் கான், இருந்து வருகிறார்.

உலகளவில் இருபது - 20 போட்டிகளில் நன்கு அறிமுகமான ரஷீத் கான் இருபது - 20 தலைமைக்கு பொருத்தமானவர். அவரின் அனுபவம், திறமை, தலைமைப் பண்பு அணியை சிறப்பாக வழிநடத்தும் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இருபது - 20 உலகக்கிண்ணத்துக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ள ஆப்கானிஸ்தான் அணி, பி பிரிவில் இந்தியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகளுடன் இடம்பெற்றுள்ளது. அடுத்த இரு அணிகள் தகுதிச்சுற்று மூலம்தெரிவாகும். (ஐ)

# தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் அரசு அதிக கவனம்

## அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 08

தமிழ் மக்களின் பிரச்னைகளைப் படிப்படியாகத் தீர்த்து வைப்பதில் ராஜபக்ஷ அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது என அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

"வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு செயல்பட வேண்டும். ஆட்சியைக் கவிழ்க்க எத்தனிக்கும் எதிரணியினரின் சதி நடவடிக்கைகளுக்கு அவர்கள் துணைபோகக் கூடாது" எனவும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ் மக்களின் பிரச்னைகளைப் படிப்படியாகத் தீர்த்து வைப்பதில் ராஜபக்ஷ அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது என்பதை என்னைப் பல தடவைகள் நாடாளுமன்றத்தில் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தெரியப்படுத்தியிருக்கின்றேன். அதன் ஒரு கட்டமாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 16 தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார். சிறையிலுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையையும் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி அண்மையில் நடத்தவிருந்த சந்திப்பு தவிர்க்க முடியாத காரணத்தாலேயே ஒத்திவைக்கப்பட்டது. அந்தச் சந்திப்பு விரைவில் நடைபெறும்.

தற்போதைய கொரோனா நிலைமையால் நாடு பொருளாதார ரீதியில் பல சவால்களைச் சந்தித்துள்ளது. இந்தச் சூழ்நிலையை எதிரணியினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகின்றனர். அரசுக்கு எதிராகவும் - அரசுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் பொய்யான கருத்துக்களை எதிரணியினர் பரப்பி வருகின்றனர். எதிரணியினரின் இந்தக் கட்டுக்கதைகளை நாட்டு மக்கள் நம்பக்கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் எதிரணியினரின் சுயநல அரசியலைக் கருத்தில் கொண்டு செயற்படவேண்டும்.

கடந்த நல்லாட்சி அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் தமிழ் மக்களையும் நம்ப வைத்து ஏமாற்றியது. இதனைத் தமிழ்த் தரப்பினர் மறக்கக்கூடாது" - என்றார். (இ)



## மைத்திரியை நேரில் சந்தித்து அமெ. தூதுவர் முக்கிய பேச்சு

கொழும்பு, ஜூலை 08

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மேற்படி சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மற்றும் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, தனது பதவிக் காலத்தில் அமெரிக்கத் தூதுவர் வழங்கிய இராஜதந்திர ஒத்துழைப்புகளுக்கு முன்னாள் ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார். (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 12 - 04 - 1950



உதிர்வு 04 - 07 - 2021

**சின்னத்துரை திரவியராஜா (சண்முகம்)**

(மெக்கானிக்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கைதடி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை திரவியராஜா அவர்கள் கடந்த 04.07.2021 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற வசந்தாதேவி அவர்களின் அன்புக் கணவரும், ரவிகுலன் (இலங்கை), அகிலன் (பிரான்ஸ்), பிரதீபா (பிரான்ஸ்), பிரவீனா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜதீஸ், கருணாகரன், ஆனந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஜெய், அஜீவன், அஜீசன், யதுர்சன், யொனாதன், யஸ்வீனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

**ரவிகுலன் (மகன்) - 0767023093**

**அகிலன் (மகன்) - 0033660336295**

**பிரதீபா (மகள்) - 0033752956868**

**பிரவீனா (மகள்) - 004553780711**

தகவல்
**குடும்பத்தினர்.**

## நெல்லியடி, கரவெட்டியில் இருவருக்கு கொரோனா

வடமராட்சி, ஜூலை 08

யாழ்., நெல்லியடி மற்றும் கரவெட்டிப் பகுதிகளில் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நோய் அறிகுறிகளுடன் சிகிச்சை பெறச் சென்ற இருவருக்கே தொற்று உறுதியாகியுள்ளது.

நெல்லியடி பொதுச்சந்தையில், பழக்கடை வைத்திருக்கும் ஒருவரின் உறவினருக்கும், தனியார் பஸ் சேவையில் ஈடுபடும் நடத்துநரின் மனைவிக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (இ-2)

# 'தாமரை மொட்டு' பிளவுபட ஒருபோதும் இடமளியேன்!

## பஸில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 08.

"மக்களின் அமோக ஆதரவுடன் நாட்டின் ஆட்சியைத் தீர்மானித்த கட்சியே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி. எனவே, கட்சி பிளவுபட ஒருபோதும் இடமளியேன். கட்சியை மென்மேலும் வலுப்படுத்துவேன்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகப் பஸில் ராஜபக்ஷவின் பெயர் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வர்த்தமானி மூலம் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சிங்களம், தமிழ், முஸ்லிம் என மூவின மக்களின் தேவைகளைக் கண்டறிந்து அவர்களைத் தேடித் சென்று அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்து சேவையாற்ற நான் தயாராக இருக்கின்றேன்."

ஜனாதிபதியும் பிரதமரும் இந்த நாட்டை அபிவிருத்தியிலும் பொருளாதாரத்திலும் முன்னோக்கிச் செல்ல உழைக்கின்றார்கள். அவர்கள் இருவரினதும் கைகளைப் பலப்படுத்தி மக்களின் பக்கம் நின்று சேவையாற்ற நான் விரும்புகின்றேன்.

எனக்கு எந்த அமைச்சுப் பதவியை வழங்குவது என ஜனாதிபதியும் பிரதமருமே தீர்மானம் எடுப்பார்கள். எந்த அமைச்சுப் பதவியையும் ஏற்க நான் தயாராக இருக்கின்றேன்.



நாட்டின் நல்லிணக்கத்துக்காகத் தமிழ்க் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் உள்ளிட்ட ஆளும் - எதிரணியிலுள்ள அனைத்துக் கட்சிகளுடனும் நான் பேச்சு நடத்துவேன்" - என்றார். (இ)

# சுற்றுலா வீசா கட்டண அறவீட்டில் மாற்றம் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்க முடிவு

கொழும்பு, ஜூலை 08

வீசா இன்றி இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களிடம் தங்கியிருக்கும் காலத்துக்கான வீசா கட்டணத்துக்கு மேலதிகமாக 500 அமெரிக்க டொலரை அறவிடுவது உள்ளிட்ட வீசா வழங்கும் நடைமுறைகளை மறுசீரமைக்கும் குடிவரவோர் - குடியகல்வோர் ஒழுங்குவிதிகளை பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்க பாதுகாப்பு அமைச்சு சார் ஆலோசனைக் குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய குடிவரவோர் குடியகல்வோர் ஒழுங்குவிதிகளுக்காக -2019 ஜூன் 03ஆம் திகதிய 2126/13 ஆம் இலக்க அதிவிசேட அவர்த்தமானி பத்திரிகை இன்று 8ஆம் திகதி அனுமதிக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடிய இக்குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான டிரான் அலஸ் மற்றும் மேஜர் பிரதீப் உந்துகொட ஆகியோர் கலந்து கொண்டிருந்ததுடன் அரச அதிகாரிகள் 'மெய்நிகர்' முறையின் கீழ் கலந்துகொண்டனர்.

சுற்றுலா வீசா கட்டணத்தை அறவிடும்போது தற்போது கடைப்பிடிக்கப்படும் குழப்பான முறைக்குப் பதிலாக ஒரே கட்டண முறையை அறிமுகப்படுத்துவது, சுற்றுலா விசாவுக்காக வழங்கப்படும் காலத்தை மூன்று மாதங்களிலிருந்து 9 மாதங்களாக மாற்றுவது உள்ளிட்டவை இதன்மூலம் மேற்கொள்ளப்படும் என குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் யூ.வீ.சரத் ரூபசிங்ஹ தெரிவித்தார்.

அத்துடன் தற்போது இலங்கைப் பெறுமதியில் அறவிடப்படும் வீசா கட்டணம் அமெரிக்க டொலரில் அறவிடப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ)

## நாட்டின்...

கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

எங்கள் தேசத்தைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமை கொள்கிறோம். அந்த பண்டைய மரபுரிமை பற்றி நாம் அடிக்கடி பேசுகிறோம். அந்த மரபுரிமையை இன்று வரை பாதுகாக்க முடிந்தமையாலேயே உலகத்தின் பார்வையில் நாம் ஒரு பெருமைமிக்க தேசமாக உயர முடிந்தது என்று நான் நம்புகிறேன்.

எமது நாட்டின் அந்த பண்டைய மரபுரிமையை வெளிக்கொணர்ந்து அவற்றை பாதுகாப்பது தொல்பொருள் திணைக்களமாகும். அவர்கள் அதற்காக பல்வேறு அர்ப்பணிப்புகளை மேற்கொள்கின்றனர். அந்த மரபுரிமைகளை பாதுகாப்பதுடன் அது தொடர்பில் மக்களுக்கும் தெளிவுபடுத்துகின்றனர்.

1890 ஆம் ஆண்டு இது போன்றதொரு நாளிலேயே இத்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தவகையில் இத்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 131 ஆண்டுகளாகின்றன.

இந்த நீண்ட காலப்பகுதியில் தொல்பொருள் திணைக்களம் ஆற்றிய பணிகளை வார்த்தைகளால் கூறி முடிக்க முடியாது. எனினும் அது நாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட உன்னத பணி என்பதை நான் இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த வேண்டும்.

இது முழு உலகமும் கோவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு தருணம் என்பதை நாம் அறிவோம். அந்த சவாலை வெற்றிக்கொள்வதற்கு ஒரு தேசமாக நாம் போராடி வருகின்றோம். நாட்டுக்கு எத்தகைய சவால்கள் ஏற்படினும் அதனை எதிர்கொள்வதற்கு எமது முன்னோர்கள் விட்டுச்சென்ற மரபுரிமைகள் எமக்கு ஒரு பலமாக இருக்கும்.

இன்று இவ்வாறானதொரு தொற்று நிலை இல்லாதிருப்பின் ஆண்டுக்கு இலட்சக் கணக்கான சுற்றுலா பயணிகள் எமது நாட்டின் அழகையும், பண்டைய மரபுரிமைகளையும் பார்வையிட இலங்கைக்கு வந்திருப்பார்கள்.

தொல்பொருள் துறையின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 7 ஆண்டுகளுக்குப் பின்னர் தொடங்கப்பட்ட சிகிரியாவின் அகழ்வாராய்ச்சிகள் இன்னும் நிறைவடையவில்லை. இன்று சிகிரியா ஓர் உலக பாரம்பரிய தளம் மட்டுமல்ல, உலகின் அதிசயமும்கூட. இது அனைத்தும் தொல்பொருள் திணைக்களத்தின் காரணமாகும்.

கோவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில்கூட தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தமது பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர. அவர்கள் ஒருபோதும் தமது பணியை கைவிடவில்லை. நாட்டை காப்பது போன்றே அவர்கள் பணியாற்றுகின்றனர் என இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க குறிப்பிட்டார். எமது அமைச்சின் செயலாளர் தொடர்ந்து எம்மவர்களின் தேவை குறித்து அடிக்கடி நினைவுபடுத்துவார். அவற்றை நாம் நிறைவேற்றுவோம்.

அதனால் சிரமம் பாராது எதிர்கால சந்ததியினருக்காக தொல்பொருள் தளங்களை பாதுகாத்து, புதிய அறிவை உலகின் மத்தியில் முன்வைத்த அனைவருக்கும் நாம் மரியாதை செலுத்துகிறோம்.

எமது ஜனாதிபதி தொல்பொருள் தளங்களை பாதுகாக்க இரவு பகலாக பாடுபடும் தலைவராவார். அவர் அவ்விடங்களுக்கு சென்று அவ்விடங்கள் அழிக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை மேற்கொண்டார். அதற்காக ஜனாதிபதி செயலணியொன்றையும் நிறுவியுள்ளார். அதற்கமையவே முஹூது மஹா விகாரை போன்று பாதுகாக்கப்பட வேண்டிய தளங்கள் இந்தளவிற்கேனும் பாதுகாக்கப்பட்டுள்ளது. அந்த வரலாற்று இடங்கள் தேசிய மரபுரிமையாகும். ஓர் இனத்திற்கும் ஒரு மதத்திற்கும் உரித்தானவை அல்ல. இந்நாட்டின் உரிமையாகும்-என்றார்.

## ஆசிரியர்களுக்கு...

கும் தடுப்பூசி போடுவதற்கான முறையான திட்டத்தை நாங்கள் உருவாக்கி வருகிறோம். நாடு முழுவதும் உள்ள 2 இலட்சத்து 42 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் கோவிட்-19 தடுப்பூசி வழங்கப்படும். பாடசாலைகள் தொடங்குவதற்கு முன்பு அவர்கள் அனைவருக்கும் தடுப்பூசி போடுவோம் என்று நம்புகிறோம்" என்று கல்வி அமைச்சர், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை, வயது வேறுபாடின்றி ஆசிரியர்கள் அனைவருக்கும் கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் பணி வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வைத்தியசாலை...

கஜேந்திரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஏற்றுமதி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் மீதான ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் பேசுகையில்,

யாழ். நகரப்பகுதியில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படவேண்டிய ஒன்றரை ஏக்கர் காணி இராணுவத்தினருக்கு வழங்கப்படுவதற்காக சுகாதார அமைச்சின் செயலாளரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் உரை நடைபிரிவு அமைக்க காணி இல்லாது இன்றுவரை கட்டிடம் கட்டப்படவில்லை.அதேபோன்று மகப்பேற்று விடுதியில்லை .சிறுவர் சிகிச்சை விடுதியில்லை .கண் சிகிச்சை விடுதியில்லை . இவ்வாறான நிலையில் அந்த ஒன்றரை ஏக்கர் காணி இராணுவத்தினருக்கு வழங்கப்படுவதனை நாம் கடுமையாக கண்டிக்கின்றோம், எதிர்க்கின்றோம்.

இந்த சபையிலே சுகாதார அமைச்சருக்கு நாம் எத்தனையோ தடவை சுகாதாரத்துறையில் உள்ள பிரச்னைகள், குறைபாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டியுள்ளோம்.அமைச்சருக்கு இவை பற்றி சிந்தனையில்லை. இராணுவமயமாக்கும் நோக்கோடு முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கையை நாம் கண்டிக்கின்றோம். அந்தக்காணி யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு கையளிக்கப்பட வேண்டும்.

சிறுவர் வைத்தியசாலைக்காக புலம்பெயர் தமிழ் மக்களின் உதவியோடு, அவர்களிடமிருந்து பணம் திரட்டி இணுவிலில் வைத்தியசாலை கட்டு வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றபோது இந்தக் காணியை இராணுவத்துக்கு கொடுப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

## அபிவிருத்தி...

ரிமைக் கருத்திட்டமாக அடையாளங் காணப்பட்டுள்ள -

வடக்கு, வடமத்திய, மத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் குடிதண்ணீர் மற்றும் நீர்ப்பாசன விநியோகக் கருத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காகவும்,

கையகப்படுத்தப்படவுள்ள காணிகளுக்கான உரிமையாளர்களுக்கு 'லார்க்' மற்றும் 'சுப்பர் லார்க்' முறைமையை பின்பற்றி இழப்பீடுகளைக் கணிப்பிட்டு செலுத்துவதற்கும் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மேலும் 38 பேர்...

குணவர்த்தன நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

21 பெண்களும் 17 ஆண்களும் இவ்வாறு உயிரிழந்தனர் என்று சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 351 ஆக அதிகரித்துள்ளது. (இ)

# "பஸிலை எம்.பி.யாக முடியாது"

கொழும்பு, ஜூலை, 08

பொதுத் தேர்தலில் பொது ஜன பெரமுன வெளியிட்ட பட்டியலில் பஸில் ராஜபக்ஷவின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை என்பதால் அவரை பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்க முடியாது என மாற்றுக்கொள்கைளிற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

பஸில் ராஜபக்ஷவை சிறீலங்கா பொதுஜனபெரமுன பாராளுமன்ற உறுப்பினராக நியமித்துள்ளமை குறித்து மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் கரிசனம் வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அறிக்கை ஒன்றை மாற்றுக் கொள்கைக்கான நிலையம் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் அரசமைப்பின் 99 ஏபிரிவின் படி பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படக்கூடியவர்கள் என 2020 நாடாளுமன்ற தேர்தலில் பொதுஜன பெரமுனவினால் வெளியிடப்பட்ட பட்டியலில் பஸில் ராஜபக்ஷவின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை என்றும் மாற்றுக் கொள்கைகளிற்கான நிலையம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## இலங்கையின்...

யடைந்த நாடுகள் பட்டியலில் முதலிடம் பிடிக்கவும் இலங்கை கிரிக்கெட் அணி தோல்வியடையு ம் அணிகள் பட்டியலில் முதலிடம் பிடிக்கவும் போட்டியிடுகின்றனவென தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஏற்றுமதி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் மீதான ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்ததுடன் மேலும் பேசுகையில்,

இந்த நாடு அனைத்து துறைகளிலும் வரலாற்றில் என்றுமில்லாதவறு தோல்விகளையும் பின்னடைவுகளையும் சந்தித்துள்ளது. ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் பல தடைகளையும் சவால்களையும் சந்தித்து வரும் துர்பாக்கியம் இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. தோல்வியடைந்து கொண்டிருக்கும் அரசினால் ஒரு நாட்டினை வெற்றியடைய செய்ய முடியாது. பொருளாதார,அரசியல் ரீதியாக இந்த அரசு முழுமையாக தோல்வியடைந்து விட்டது. ஆனால், அதற்காக இந்த நாட் டை தோல்வியடைந்த நாடாக மாற்றிக்கொள்ள மக்கள் யாரும் அனுமதிக்கப்போவதில்லை.

ஆட்சிபீடமேறிய மிக குறுகிய காலத்தில் இந்த அரசு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற தவறிய மிக மோசமான மக்களினால் கணிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை நீடித்தால் காத்திருக்கும் பேராபத்துக்களிலிருந்து இலங்கையை காப்பாற்ற முடியாது. இலங்கை கிரிக்கெட் அணி அதிக தோல்விகளை சந்தித்த வரலாற்று சாதனையை பெற்றுவிட்டது. உலக கோப்பையை வென்ற ஒரு அணி அடுத்த உலக கோப்பை போட்டியில் விளையாடுவதற்காக தகுதி சுற்றுக்குள் செல்ல வேண்டிய பரிதாப நிலையில் உள்ளது. அதே போன்றே தோல்வியடைந்த நாடுகளின் பட்டியலில் முதலிடம் பெறுவதற்கு இந்த அரசு முயற்சி செய்கின்றது.

இறைமை.இறைமையென மூச்சுக் கொருதடைவை முழங்கிக்கொண்டிருக்கும் இந்த அரசு நாட்டின் சுவாசமே அடங்கிப்போவதைக் கண்டு கொள்ளாமல் அலட்சியமாகவுள்ளது. அரசியல் தீர்வுக்காகவும் மனித உரிமை விடயங்களுக்காகவும் பொருளாதார மீட்சிக்காவும் நிரந்தர சமாதானத்துக்காகவும் உண்பதற்காக, உறங்குவதற்காக மக்கள் இன்று வீதிகளில் இறங்கி போராடிக்கொண்டிருக்கின்றனர்.

இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியில் தமிழ்,முஸ்லிம் மக்களும் தலைவர்களும் சிங்கள மக்கள், தலைவர்களுடன் இணைந்து போராடியது போன்று இலங்கையின் இரண்டாவது சுதந்திர போராட்டத்துக்கு தமிழ், முஸ்லிம் மக்களை மீண்டும் இணையுமாறு பிக்குகள் அழைக்கின்றனர். மூவின மக்களும் இணைந்து போராடினால் தான் சுதந்திரம் பெற முடி யுமென்பதனை பௌத்த தலைவர்கள் உணர்ந்திருப்பது நல்ல அறிகுறி.

இன்று வடக்கு கடல்வளத்தை தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ளவோ அதனை தமது வாழ்வாதாரத்துக்கு பயன்படுத்திக்கொள்ளவோ முடியாதிருக்கின்றது. சட்டபூர்வமான,சட்டவிரோதமான ஆதரவுடனான நடவடிக்கைகளினால் அப்பகுதி மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து பட்டினி சாவை எதிர் நோக்குகின்றனர். தென்னிலங்கை மீனவர்கள் ஒரு புறம் தென்னிந்திய மீனவர்கள் ஒரு புறம், சீன முதலீட்டாளர்கள் மறு புறம் என வடக்கின் கடல் வளங்கள் சூறையாடப்படுகின்றன.

இலங்கையில் ஏற்றுமதி செயற்பாட்டில் சீனர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் இலங்கையின் அரசியலிலும் சீனா ஆக்கிரமிப்பும் ஆதிக்கமும் செலுத்துவதை உங்களால் தடுக்க முடியாது என்றார்.

## மஹிந்தவிடம்...

அவர் கூறினார்.

பஸில் ராஜபக்ஷவை பாராளுமன்ற உறுப்பினராக பெயரிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு தலைவரின் கையொப்பத்துடன் அதிவிசேட வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டது.

பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட தனது பதவியை இராஜினாமா செய்தமையால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பஸில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இன்று பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுக்கொள்ளும் பஸில் உடனடியாகவே நிதி அமைச்சராக பொறுப்பேற்பார் என தெரியவருகிறது.

## 1,229 பேருக்கு...

றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 68 ஆயிரத்து 662 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1, 472 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 38 ஆயிரத்து 131 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 180 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## தமிழ் மக்களுக்கு...

பிரிட்டன் உயர்ஸ்தானிகருடனான கூட்டமைப்பினரின் சந்திப்பு கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகர் ஆலயத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களைச் சந்திக்கக் கிடைத்ததை மகிழ்ச்சியாகக் கருதுவதாக உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் இதன்போது தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள், அதிகாரப் பகிர்வு, மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக் கூறலின் அவசியம் போன்ற விடயங்கள் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. (இ)

ஈழநாடு
Eelanadu

# ரிஷாத் வழக்கு: ஹக்கீம் காட்டம்



கொழும்பு, ஜூலை 08

நீதியரசர்கள் வரிசையாக விலகினால், தடுத்து வைக்கப்பட்டிருப்பவருக்கு பாரதூரமான அநீதி இழைக்கப்படலாம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. பாராளுமன்றத்தில் விசனம் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தொடர்பான வழக்கில் நீதியரசர்கள் விலகி வருவது பற்றி அவர் மேலும் கூறியதாவது: -

”இங்கு நீதி அமைச்சர் இந்த மசோதா சம்பந்தமாக நீண்ட விளக்கமொன்றை அளித்தார். இப்பொழுது ஒரு விடயம் தொடர்பில் புதியதொரு யூகம் ஏற்பட்டிருக்கின்றது.

நாங்கள் உயர்நீதிமன்ற நீதியரசர்களுக்கு எப்பொழுதுமே மதிப்பளித்து வருகின்றோம். வழக்கிலிருந்து விலகிக்கொள்வதற்கு அவர்கள் காரணங்களைக் கூறக் கூடும். ஆனால், இப்பொழுது நீதியரசர்கள் நால்வர் வரிசையாக வழக்கிலிருந்து விலகியுள்ளனர். இதில் தலையீடுகள் எவையும் இருந்திருக்க முடியாது.

இது பற்றி ஒரு நிலையான நெறிமுறை இருக்க வேண்டும். உயர்நீதிமன்ற பிரதம நீதியரசரும் அறிவுறுத்தப்பட்டிருக்க வேண்டும். அதாவது நீதியரசர் குழாத்தை நியமிக்கும்போது குறைந்த பட்சம் அது பற்றி குறிப்பிடப்பட்டு, அவ்வாறு வழமையாக இடம்பெறாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும்.

முன்னர் கூறியவாறு, பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தொடர்பான வழக்கிலிருந்து இப்பொழுது நீதியரசர்கள் நால்வர் விலகி இருக்கின்றனர். அவர் தடுப்புக் காவலில் 73 நாட்களாக இருந்து வருகின்றார். இந்த மனித உரிமை வழக்கு இதே காரணத்தால் பல முறை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

இந்த விதமாக நீதியரசர்கள் ஒருவர் பின் ஒருவராக தொடர்ச்சியாக விலகிக்கொண்டே போனால், அதன் விளைவாக இறுதியில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவருக்கு பாரதூரமான அநீதி இழைக்கப்பட்டதாக ஆகிவிடும்.

அவர் ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியாக இருப்பதனால் இந்த வழக்கின் தன்மையைப் பொறுத்து, ஒருவிதமான வித்தியாசமான தோற்றப்பாடு ஏற்படக்கூடும். ஆகையால், பிரதம நீதியரசர், வழக்குக்கு நீதியரசர்களைத் தேர்ந்தெடுக்கும்போது இவ்வாறு நடந்து விடாதிருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும்” - என்றார். (இ)

### தனிமைப்படுத்தல் விதிகளை மீறி

## ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்த 13 பேர் நேற்று கைதாகி பிணை



கொழும்பு, ஜூலை 08

தனிமைப்படுத்தப்பட்ட விதிகளை மீறி முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் தொடர்பாக நேற்று கைது செய்யப்பட்ட 13 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, ஜா - எலப் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்த குற்றச்சாட்டில் நேற்று கைது செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மஹிந்த ஜயசிங்க உள்ளிட்ட இருவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவு மற்றும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி இவர்கள் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட குற்றச்சாட்டில் பமுனுகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமாகிய அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த ஆறு பேரும் வத்தளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

இந்தப் போராட்டத்தை தடை விதித்து வெலிசறை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவை வெளியிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது,

இருப்பினும், சந்தேகநபர்கள் நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேவேளை, கொம்பனித் தெருவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்ட குற்றச்சாட்டில் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்ட முன்னிலை சோசலிச கட்சி உறுப்பினரான துமிந்த நாகமுவ உள்ளிட்ட 6 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது இவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சந்தேகநபர்களை 14 நாட்கள் தனிமைப்படுத் தலுக்கு உட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே, ஜே.வி.பியின் முன்னாள் மாகாண உறுப்பினர் சமந்த வித்யாரத்ன, அனைத்து இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன மற்றும் 3 பேர் நேற்று காலை போகஹகும்புர பொலிஸில் சரணடைந்த பின்னர் கைதுசெய்யப்பட்டனர்.

ஜூலை முதலாம் திகதி வெலிமடை, பொரலந்தை, போகஹகும்புர விவசாயிகளால் நடத்தப்பட்ட போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது. வெலிமடை நீதிமன்றில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் தலா ஒரு இலட்சம் ரூபா ரூபாய் ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (இ)



# ஜனாதிபதியுடன் சுதந்திர கட்சியினர் 15இல் விசேட சந்திப்பு

### அரச கூட்டு முறுகல் குறித்து பேச்சு

கொழும்பு, ஜூலை 08

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பு எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.**

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விடுத்த கோரிக்கையின் பிரகாரமே சந்திப்புக்கு திகதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரச கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை, தமது கட்சிக்கான ஒதுக்கீடுகள் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- ஆரம்பம், குள்ளநரிக்கூட்டம் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - எங்கடா இருந்திங்க இவ்வளவு நாளா?

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் சுத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்